பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 12 புதன்கிழமை (28.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 02

# சர்வதேசம் மீது தமிழர் வைத்திருந்த நம்பிக்கை தகர்ந்து போய்விட்டது



## மாவீரர் தின உரையில் பிரபா விசனம்

கிளிநொச்சி,நவம்பர் 28

**தமிழரின் தேசியப் பிரச்சினையில் சர்வதேச நாடுகளின் நகர்வுகளும், நடவடிக்கைகளும் எம் மக்களுக்குத் திருப்தி தருவனவாக அமையவில்லை. இந்நாடுகள் மீது எமது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை இன்று தகர்ந்துபோயிருக்கின்றது. இந்நாடுகளின் நடுநிலைச் செயற்பாட்டிலே இன்று பெரும் கேள்விக்குறி எழுந்திருக்கின்றது.**

**- இவ்வாறு நேற்றைய தமது மாவீரர் தின உரையில் விசனம் தெரிவித்திருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.**

நேற்று மாலை 5.34 மணிக்கு வன்னியில் இதற்கென ஒதுக்கப்பட்ட விசேட மையத்தில் இருந்து புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் முக்கியத்துவம் மிக்க - வருடாந்த - மாவீரர் தின உரையை நிகழ்த்தினார்.

அந்த உரையின் முழு விவரம் வருமாறு:-

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று மாவீரர் நாள். தமிழீழச் சுதந்திரப் போரை இந்தப் பூமிப்பந்திலே முதன்மையான விடுதலைப் போராட்டமாக முன்னிறுத்திய எமது மாவீரச் செல்வங்களை நினைவு கூரும் தூய நாள். ஆயிரமாயிரம் அக்கினிப் பந்துகளாக, எரி நட்சத்திரங்களாக எரிந்து, எமது விடுதலை வானை அழகுபடுத்தி, அலங்கரித்து நிற்கும் எமது சுதந்திரச் சிற்பிகளை நினைவுகூரும் புனிதநாள்.

(தொடர்ச்சி 02ஆம், 07ஆம் பக்கங்களில்)

# பிரபாவைக் கொல்வது உறுதி அவரது சாவு நெருங்கிவிட்டது!

## கோத்தபாய ஆணித்தரமாக சூளுரை

கொழும்பு,நவ.28

''தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நாம் கொல்வது உறுதி. அவரது சாவு நெருங்கிவிட்டது. இன்று (கடந்த திங்களன்று) அவர் கொண்டாடும் 53ஆவது பிறந்த தினமே அவர் காணும் கடைசிப் பிறந்த தினமாக இருக்கும்.''

- இந்த சாரப்பட ஆணித்தரமாகச் சூளுரைத்திருக்கின்றார் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு நேற்றுமுன் தினம் அளித்த விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

அவரது அந்தப் பேட்டி தொடர்பாக ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினத்தன்று அவரைக் கொல்லும் இலக்கோடு அவரைக் குறிவைத்திருக்கின்றது இலங்கை அரசு.



ஒளிவு மறைவான கெரில்லா இயக்கத்தின் தலைவரின் நடமாட்டங்களும், தந்திரோபாய வெற்றிகளை நிலைநாட்டும் வலிமையும் முடக்கப்பட்ட நிலையில், இந்த நீண்ட கால யுத்தத்தில் இப்போது தங்களின் கை

(08ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளியவளையிலும் கிளைமோர்த் தாக்கு!

கொழும்பு,நவ.28

முல்லைத்தீவு மாவட்டம், முள்ளியவளை, ஒட்டுசுட்டான் வீதியிலுள்ள வெள்ளமலை என்ற இடத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்குச் சொந்தமான வாகனம் ஒன்றை இலக்கு வைத்து படையினரின் ஆழ ஊடுருவும் அணியினர் கிளைமோர்த் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் வாகனத்தில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளார் என்றும்கூறப்பட்டது. (அ-சி)

# 'புலிகளின் குரல்' வானொலி நிலையம் மீது 'கிபிர்' விமானங்கள் கோரக் குண்டுவீச்சு!

கிளிநொச்சி,நவ.28

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' வானொலியின் ஒலிபரப்பு நிலையம், நடுவப்பணியகம் ஆகியவற்றின் மீது விமானப் படையின் கிபிர் விமானங்கள் நேற்றுப் பிற்பகல் 4.30 மணிக்கு தொடர்ச்சியாக குண்டுத் தாக்குதலை நடத்தின. அத்தாக்குதலில் 9 பேர் பலியாகினர். 10 பேர் படுகாயமடைந்தனர்.

கிளிநொச்சி நகரிலிருந்து 3.5 கி.மீ. தொலைவில் உள்ள ஏ-9 வீதியில் புலிகளின் குரல் வானொலி நிலையம் அமைந்துள்ளது.

## பணியாளர்கள் மூவரும் பொதுமக்கள் 6 பேரும் பலி!

தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரையைக் கேட்பதற்காக பெருந்திரளான பொதுமக்கள் அங்கு நேற்றுமாலை குழுமியிருந்தனர். அப்போது வானொலி நிலையத்தின் மீது விமானப் படையின் 2 கிபிர் விமானங்கள் 12 குண்டுகளை அடுத்தடுத்து அகோரமாக வீசின.

இத்தாக்குதலில் புலிகளின் குரல் நிலையப் பணியாளர்கள் 3 பேர் மற்றும் 6 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் புலிகளின் குரல் நிறுவனப் பணியாளர்கள் 4 பேர் உட்பட 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வானொலி நிலைய அறிவிப்பாளர் இசைவிழி செம்பியன், வானொலி நிலைய பொறியியல் பிரிவைச் சேர்ந்த கி.தர்மலிங்கம், சுரேஷ் லிம்பியோன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கா.சாந்தபோதினி, அன்பரசி ராஜ்குமார் உள்ளிட்ட 4 வனொலி நிலைய பணியாளர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகொலை செய்யப்பட்ட மற்றும் படுகாயமடைந்த பொதுமக்கள் விவரங்கள் நேற்றிரவு வரை கிடைக்கவில்லை.

நேற்றைய விமானத் தாக்குதலில் புலிகளின் குரல் வானொலி நிலையம் முற்றாக நாசமடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (08ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர தின நிகழ்வில் இந்தியப் பிரதமர்

பிரிட்டனிடமிருந்து இலங்கை விடுதலை பெற்றதையொட்டிய அறுபதாவது ஆண்டு சுதந்திர தினம் அடுத்த பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையில் கொண்டாடப்படும்போது அந்நிகழ்வில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

நேற்று நாடாளுமன்றத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இத்தகவலைத் தெரிவித்தார். (08ஆம் பக்கம் பார்க்க)

# துணுக்காயில் கிளைமோர் தாக்குதல் ஏழு சிறுமிகள் உட்பட 11 பேர் பலி!

## மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தச் சென்றவர்கள்

கிளிநொச்சி,நவ.28

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காயில் உள்ள ஐயன்குளம் பகுதியில் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் பாடசாலைச் சிறுமிகள் ஏழு பேர் உட்பட 11 பேர் பலியானார்கள்.

கிளிநொச்சி நகரிலிருந்து மேற்கே 25 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது ஐயன்குளம் பகுதி.

மாவீரர் நாளையொட்டி தமது உறவுகளுக்கு அகவணக்கம் செலுத்துவதற்காக பாடசாலைச் சிறுமிகள் மற்றும் பொது மக்கள் வானில் சென்று கொண்டிருந்த போது அவர்களை இலக்குவைத்து கொக்காவில் - துணுக்காய் வீதியில் முற்பகல் 11.30 மணிக்கு இராணுவத்தினர் இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

நாகரத்தினம் பிரதீபா, அற்புதராசா நிரோசா, சண்முகவடிவேல் அஜிதா, கருணாகரன்

(08ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசம் மீது தமிழர் வைத்திருந்த......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது மண்ணிலே, எமது காலத்திலே எமது கண்முன்னே வீரத்திற்கு இலக்கணமாக வாழ்ந்து, விடுதலையின் வித்தாக வீழ்ந்தவர்கள் எமது மாவீரர்கள். எதிரிக்குத் தலை வணங்காத வணங்கா மன்னர்கள். எமது தேச விடுதலைக்காகக் களமாடி வீழ்ந்த மாவீரர் அனைவரும் மனிதமலைகளாக, மனிதக்கோட்டைகளாகவே எமது மண்ணைக் காத்துநிற்கின்றனர். ஈடிணையற்ற ஈகங்கள் புரிந்து, அளப்பரிய அர்ப்பணிப்புக்கள் செய்து, எண்ணற்ற சாதனைகள் புரிந்து எமது தேசத்தின் வரலாற்றுச் சக்கரத்தை விடுதலையின் பாதையில் விரைவாக அசைத்துச் செல்பவர்கள் எமது மாவீரர்களே.

மனித வரலாற்றுச் சக்கரம், காலங்களைக் கடந்து, யுகங்களை விழுங்கி, முடிவில்லாமற் சுழல்கிறது. இந்த முடிவில்லாத இயக்கத்தில், உலகத்து மனிதன் நிறையவே மாறிவிட்டான். அவனிடத்தில் எத்தனையோ புதிய சிந்தனைகள் தோன்றியிருக்கின்றன; எத்தனையோ புதிய கருத்தோட்டங்கள் பிறந்திருக்கின்றன. எத்தனையோ புதிய எண்ணங்கள் அவன் மனதிலே தெறித்திருக்கின்றன. இந்தச் சிந்தனைத் தெறிப்பிலே, சுதந்திரமும் சமத்துவமும் கூடிக்குலவும் ஒரு வாழ்வை அவன் கண்டுகொண்டான். சாதி, சமய, பேதங்கள் ஒழிந்த, அநீதியும் அட்டூழியங்களும் அகன்ற, சூழ்ச்சிகளும் சுரண்டல்களும் நீங்கிய, கொந்தளிப்புக்களும் நெருக்கடிகளும் அகன்ற ஓர் உன்னத வாழ்வைக் கற்பிதம் செய்தான். இந்தக் கற்பிதத்திலிருந்து தோன்றிய கருத்துருவம் தான் சுதந்திரம். இந்த உன்னதமான கருத்துருவை வாழ்வின் உயரிய இலட்சியமாக வரித்து, மனிதன் போராடப் புயலாகப் புறப்பட்டான்.

## முப்படைகளும் கொண்ட சகல பலங்களுடனும் நவீன இராணுவமாக வளர்ந்துள்ளோம்

ஓயாது வீசும் இந்த விடுதலைப் புயல் இன்று எமது தேசத்திலே மையம்கொண்டு நிற்கிறது. சுழன்றடிக்கும் சூறாவளியாக, குமுறும் எரிமலையாக, ஆர்ப்பரித்தெழும் அலைகடலாக எமது மக்கள் வரலாற்றிலே என்றுமில்லாதவாறு ஒரே தேசமாக, ஒரே மக்களாக ஒரே அணியில் ஒன்றுதிரண்டு நிற்கின்றனர். ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாக, ஒன்றுபட்ட இனமாகத் தமக்கு முன்னால் எழுந்த எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்துநிற்கின்றனர். எல்லைக்காப்புப் படைகளாக, துணைப்படைகளாக, விசேட அதிரடிப் படைகளாக எழுந்து நிற்கின்றனர். போர்க்கோலம் கொண்டு, மூச்சோடும் வீச்சோடும் போராடப் புறப்பட்டு நிற்கின்றனர்.

முப்பத்தைந்து ஆண்டுகளாக ஓய்வில்லாமல் வீசும் எமது வீரவிடுதலை வரலாற்றில் நாம் என்றுமில்லாதவாறு தரைப்படை, கடற்படை, வான்படையென முப்படைகளும் ஒன்றுசேர ஒரு பெரும் படையாக எழுந்து, நிமிர்ந்து நிற்கிறோம். நீண்ட கொடிய சமர்களிற் களமாடி அனுபவமும் முதிர்ச்சியும் பெற்ற முன்னணிப் படையணிகளோடும் பன்முகத் தாக்குதல்களையும் நிகழ்த்தவல்ல சிறப்புப் பயிற்சி பெற்ற சிறப்புப் படையணிகளோடும் நவீன படைக்கலச் சக்திகளுடனும் பெரும் போராயுதங்களுடனும் ஆட்பலம், ஆயுதபலம், ஆன்மபலம் எனச் சகல பலத்துடனும் நவீன இராணுவமாக வளர்ந்து நிற்கிறோம். நீண்ட காலம் பெரும் சமர்களை எதிர்கொண்டு, மூர்க்கமாகப் போர்புரிந்து பெற்றெடுத்த பட்டறிவாலும் கற்றறிந்த பாடங்களாலும் கட்டப்பட்டுச் செழுமை பெற்ற புதிய போர் மூலோபாயங்களோடும் புதிய போர்முறைத் திட்டங்களோடும் நவீன போரியல் உத்திகளோடும் எதையும் எதிர்கொள்ளத் தயாராக நிற்கிறோம். இந்த மலையான நிமிர்விற்கு, இந்தப் பூகம்ப மாற்றத்திற்கு ஆதாரமாக நிற்பவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நான் இங்கு பெருமிதத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## இப்போது ஆசியாவின் சகாப்தம் இலங்கைத்தீவு இரத்தத் தீவாகியுள்ளது

எனது அன்பார்ந்த மக்களே!

நாம் வாழும் உலகிலே புதிய பூகம்ப மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன. உலகமே ஆசியாவை நோக்கித் திரும்பியிருக்கிறது. இருபத்தோராம் நூற்றாண்டும் ஆசியாவின் சகாப்தமாக ஆரம்பித்திருக்கிறது. எமது பிராந்தியத்தைச் சேர்ந்த, எமது கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் சமூக, பொருளாதார, விஞ்ஞானத் துறைகளிலே பெருவளர்ச்சியீட்டி முன்னேறி வருகின்றன. அண்டவெளி ஆராய்ச்சிகள், சந்திரமண்டல ஆய்வுகள், அணுக்கருப் பரிசோதனைகளெனப் புதிய பாதையிலே பயணிக்கின்றன. மனித சமுதாயம் முன்னெப்போதும் காணாத புதிய சவால்களுக்கு முகம்கொடுத்து, இயற்கையின் எண்ணற்ற புதிர்களுக்கு விடைகள் காணவும் தீராத வியாதிகளுக்குத் தீர்வுகள் தேடவும் புதிய பயணத்திலே இறங்கியிருக்கிறது; அரிய உயிரினங்களையும் தாவர வகைகளையுங் கூடக் காத்து, பூகோள முழுமையையும் பாதுகாக்கின்ற புனித முயற்சியிலே காலடி எடுத்து வைத்திருக்கிறது. ஆனால், சிங்களத் தேசம் மாத்திரம் நேரெதிர்த் திசையிலே, அழிவு நோக்கிய பாதையிலே சென்றுகொண்டிருக்கிறது. தன்னையும் அழித்து, தமிழினத்தையும் அழித்து வருகிறது. இதனால், அழகிய இலங்கைத்தீவு இரத்தத்தீவாக மாறியிருக்கிறது.

பௌத்தம் ஓர் ஆழமான ஆன்மீகத் தரிசனம். அன்பையும் அறத்தையும் ஆசைகள் அகன்ற பற்றற்ற வாழ்வையும் தர்மத்தையும் வலியுறுத்தி நிற்கும் தார்மீகத் தத்துவம். இந்தத் தார்மீக நெறியை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொள்ளும் சிங்களம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே இனவாத விசத்தினுள் மூழ்கிக்கிடக்கிறது. சிங்கள இனவாத விசம் இன்று மிருகத்தனமான வன்முறையாகக் கோரத் தாண்டவமாடுகிறது. அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வன்முறை அகன்ற அகிம்சை வழியிலும், ஆயுதவழியிலும் தமிழர் நீதிகேட்ட போதும் சிங்கள உலகிலே சிறிதளவும் மனமாற்றம் நிகழவில்லை. எத்தனையோ இழப்புக்கள், எத்தனையோ அழிவுகள், எண்ணற்ற உயிர்ப்பலிகள் நிகழ்ந்தபோதும் சிங்களத் தேசம் மனந்திருந்தவில்லை. தொடர்ந்தும், அது வன்முறைப் பாதையிலேயே பயணிக்கிறது. அடக்குமுறையாலும் ஆயுதப்பலத்தாலும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணவே அது விரும்புகிறது. அமைதி முயற்சி களுக்கு ஆப்புவைத்துவிட்டு, தனது இராணுவ நிகழ்ச்சித்திட்டத்தைத் துணிவுடனும் திமிருடனும் தொடர்ந்து முன்னெடுத்துவருகிறது. இதற்குச் சர்வதேசச் சமூகத்தினது பொருளாதார, இராணுவ உதவிகளும் அரசியல் தார்மீக ஆதரவும் இராஜதந்திர முண்டுகொடுப்புக்களும் ஒருபக்கச்சார்பான தலையீடுகளுந்தான் காரணம்.

## போராட்டத்துக்கு எதிரான அரசின் பொய்யான பரப்புரை

எமது பிராந்தியத்திலே உலகப் பெருவல்லரசுகளின் இராணுவ, பொருளாதார, கேந்திர நலன்கள் புதைந்து கிடப்பதை நாம் நன்கு அறிவோம். அந்த நலன்களை முன்னெடுக்க உலக வல்லரசுகள் முனைப்புடன் முயற்சிப்பதையும் நாம் விளங்கிக்கொள்கிறோம். இதற்கு இலங்கைத்தீவில் நெருக்கடிநிலை நீங்கி, சமாதானமும் நிலையான நல்லாட்சியும் தோன்ற அனைத்துலக நாடுகள் ஆர்வமும் அக்கறையும் காட்டுவதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். இதேநேரம் பேரினவாதச் சிங்கள அரசு உலக நாடுகளின் நலன்களையும் அவை எமது பிராந்தியத்திற் பதிந்திருப்பதையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயற்சிக்கிறது. போலியான, பொய்யான பரப்புரைகள் வாயிலாக உலக நாடுகளைத் தமது வஞ்சக வலைக்குள் வீழ்த்தி, தமிழரது விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகத் திருப்பிவிடுகின்ற கைங்கரியத்தைச் செய்துவருகிறது. சிங்கள அரசின் வஞ்சக வலைக்குள் வீழ்ந்து, உலகநாடுகள் எமது பிரச்சினையில் எதிர்மறையான தலையீடுகளைச் செய்வதுதான் எமக்கும் எமது மக்களுக்கும் வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் தருகிறது.

இப்படியான அநீதியில் அமைந்த அந்நியத் தலையீடுகள், காலங்களை விழுங்கி நீண்டு செல்லும் எமது போராட்டத்திற்குப் புதியவை அல்ல. அன்று இந்தியா தனது தெற்கு நோக்கிய வல்லாதிக்க விரிவாக்கமாக எமது தேசியப் பிரச்சினையிலே தலையீடு செய்தது. தமிழரது சம்மதமோ ஒப்புதலோ இன்றி, சிங்கள அரசுடன் கூட்டுச்சேர்ந்து ஓர் ஒப்பந்தம் செய்தது. அடிப்படையில் அந்த ஒப்பந்தம் தமிழரது நலனுக்காகவோ நல்வாழ்விற்காகவோ செய்யப்பட்டதன்று. தீர்வு என்ற பெயரில் ஐம்பத்தேழிற் கைச்சாத்தான பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் இருந்த அதிகாரங்களைக்கூடக் கொண்டிராத எலும்புத்துண்டு போன்ற ஒரு அரைகுறைத் தீர்வை இந்தியா அன்று எம்மக்கள் மீது கட்டிவிட முயற்சித்தது. ஓர் இலட்சம் இராணுவத்தினரின் பக்கபலத்தோடும் இரண்டு அரசுகளின் உடன் பாட்டு வலிமையோடும் எட்டப்பர் குழுக்களின் ஒத்துழைப்போடும் அந்த ஒப்பந்தத்தைச் செயற் படுத்திவிட இந்தியா தீவிரமாக முயற்சித்தது. தமிழரது தேசியப் பிரச்சினையின் அடிப்படைகள் எதையும் தொட்டுநிற்காத, தமிழரின் அரசியல் அபிலாசைகள் எதையும் பூர்த்திசெய்யாத அந்த அரைகுறைத் தீர்வைக்கூடச் செயற்படுத்தச் சிங் களப் பேரினவாதிகள் அன்று அனுமதிக்கவில்லை.

சிங்களத் தேசம் பற்றியும் அதன் நய வஞ்சக அரசியல் பற்றியும் நாம் நன்கு அறிவோம். எமக்கு அதுபற்றிய நீண்ட பட்டறிவும் கசப்பான வரலாறும் இருக்கின்றன. எனவே தான், நாம் அன்று இந்தியாவுடன் பல்வேறு தடவைகள் பல்வேறு இடங்களிற் பல்வேறு மட்டங்களில் நடந்த பேச்சுக்களின்போது, சிங்களப் பேரினவாதம் பற்றி அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக்கூறினோம். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, தமிழர் தேசத்தில் அமைதியைக் கொண்டுவருவது சிங்கள அரசின் நோக்கமன்று, தமிழர் தேசத்தை ஆக்கிரமித்து, தமிழரின் வளங்களை அழித்து, தமிழரை அடிமை கொண்டு, அழித்தொழிப்பதுதான் சிங்கள அரசின் நோக்கம் என்பதை அன்று இந்தியாவிற்கு எடுத்துரைத்தோம். இந்தியா இணங்க மறுத்தது. இதனால், தமிழ்மக்கள் தமது மண்ணிலேயே பெரும் அழிவுகளையும் அனர்த்தங்களையும் சந்தித்தனர்.

அன்று இந்தியா இழைத்த தவறை இன்று சர்வதேசமும் இழைத்து நிற்கிறது. சிங்கள அரசின் சாதுரியமான, சாணக்கியமான பரப்புரைகளுக்குப் பலியாகி, சமாதான முயற்சிகளுக்குப் பாதுகாவலனாக நின்ற நாடுகளே, எமது விடுதலை இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்டிருக்கின்றன. இதில் வேதனையான, ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என்னவென்றால் ஒருகாலத்தில் எம்மைப் போன்று தமது சுதந்திரத்திற்காகப் போராடிய தேசங்களும் எம்மைப் பயங்கரவாதிகளாகப் பட்டஞ் சூட்டியமைதான்.

## புலம்பெயர்ந்து வாழும் மக்களுடனான உறவுப்பாலத்தை உடைக்க முயற்சி

இவற்றுக்கும் மேலாக, புலம்பெயர்ந்து வாழும் எமது மக்கள் தாம் வாழும் நாடுகளிலே பலம் பொருந்திய சக்தியாக நின்று, தமிழீழ விடுதலைப் போருக்கு உதவி வருவதையும் அரசியல் ஆதரவைத் திரட்டிவருவதையும் சிங்களத் தேசத்தாற் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சிங்களப் பேரினவாதத்தின் கோரப் பிடிக்குட் சிக்கி, எம்மக்கள் அழிந்துவருவதையும் அந்தப் பேரழிவைத் தடுக்க, புலம்பெயர்ந்த மக்கள் அரசியற் போராட்டங்களையும் மனிதாபிமானப் பணிகளையும் மேற்கொண்டுவருவதையும் சிங்களப் பேரினவாதத்தாற் சகிக்க முடியவில்லை. எனவேதான், புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கும் தாயக மக்களுக்கும் இடையிலான உறவுப்பாலத்தை உடைத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடச் சிங்களப் பேரினவாதம் தீவிரமாக முயற்சித்துவருகிறது. இந்த அநியாயத்திற்குச் சில உலக நாடுகளும் துணைபோகின்றன. எம்மக்கள் தாம் வாழும் நாடுகளின் அரசியற்சட்டங்களுக்கு அமைவாக, நீதி தவறாது மேற்கொள்ளும் அரசியற் போராட்டங்களையும் மனிதாபிமானச் செயற்பாடுகளையும் படுபாதகமான குற்றவியற் செயல்களாக இந்நாடுகள் காட்டிவருகின்றன. தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் தமிழின உணர்வாளர்களையும் கைது செய்து, சிறைகளிலே அடைத்து, அவமானப் படுத்தியிருக்கின்றன. நீதி கேட்டு, நியாயம் கோரி, எம்மக்கள் நடத்திய போராட்டங்களைக் கீழ்த்தரமாகக் கொச்சைப்படுத்தியிருக்கின்றன.

இத்தகைய நடுநிலை தவறிய - ஒருதலைப் பட்சமான - நடவடிக்கைகள் சர்வதேசச் சமூகம் மீது எம்மக்கள் கொண்டிருந்த ஆழமான நம்பிக்கைகளை மோசமாகப் பாதித்திருப்பதோடு அமைதி முயற்சிகளுக்கும் ஆப்புவைத்திருக்கின்றன சமாதானப் பேச்சுக்களிற் பங்குகொண்ட இருதரப்பினரது சமநிலை உறவைப் பாதித்து, அமைதி ஒப்பந்தமும் முறிந்துபோக வழிசெய்திருக்கின்றன. அத்தோடு, இந்நாடுகள் வழங்கிவரும் தாராளப் பொருளாதார இராணுவ உதவிகளும் இரகசியமான இராஜதந்திரமுண்டு கொடுப்புக்களும் சிங்கள இனவாத அரசை மேலும்மேலும் இராணுவப் பாதையிலேயே தள்ளிவிட்டிருக்கிறன. இதனால்தான், மகிந்த அரசு அநீதியான, அராஜகமான ஆக்கிரமிப்புப் போரை எமது மண்ணிலே துணிவுடனும் திமிருடனும் தொடர்ந்துவருகிறது.

## சமாதானத்துக்கான கதவை மஹிந்த அரசு இறுகச் சாத்தியது

இராணுவப் பலத்தைக்கொண்டு, தமிழரின் சுதந்திர இயக்கத்தை அழித்துவிடலாம் என்ற மமதையில் மகிந்த அரசு சமாதானத்திற்கான கதவுகளை இறுகச்சாத்தியது. தமிழ் மண்ணை ஆக்கிரமித்து, தமிழரை அடக்கியொடுக்கி ஆளவேண்டும் என்ற ஆசை என்றுமில்லாதவாறு தீவிரம்பெற்றது. முழுஉலகமும் முண்டு கொடுத்து நிற்க, போர்நிறுத்தத்தைக் கவசமாக வைத்து, சமாதானச் சூழலை வாய்ப்பாகப் பயன்படுத்தி, மகிந்த அரசு ஆக்கிரமிப்புப் போரை அரங்கேற்றியது. போர்நிறுத்தத்தைக் கண்காணித்த கண்காணிப்புக்குழு கண்களை மூடிக் கொண்டும் கைகளைக் கட்டிக்கொண்டும் கொழும்பிலே படுத்துறங்கியது.

அனுசரணையாளரான நோர்வே நாட்டினர் அலுத்துப்போய் அமைதியாக இருந்தார்கள். எமக்குச் சமாதானம் போதித்த உலக நாடுகள் மௌனித்துப் பேசமறுத்தன. 'சமாதானத்திற்கான போர்' என்றும் 'பயங்கரவாதத்திற்கு எதிரான கூட்டு நடவடிக்கை' என்றும் 'தமிழரின் விடுதலைக்காக, விமோசனத்திற்காக நடாத்தப்படும் போர்' என்றும் சிங்கள அரசு தமிழின அழிப்பை நியாயப்படுத்திப் போரைத் தொடர்கிறது.

மகிந்த அரசு தனது முழுப் படைப்பலச் சக்தியையும் அழிவாயுதங்களையும் ஒன்று திரட்டி எமது தாயகத்தின் தெற்குப் பிராந்தியம் மீது பெரும் போரைக் கட்டவிழ்த்துவிட்டது. ஓயாத மழையாகப் பொழிந்த அகோரக் குண்டுவீச்சுக்களாலும் எறிகணைகளாலும் எமது பண்டைய நாகரிகம் புதைந்த வரலாற்று மண் மயானபூமியாக மாறியது. சரித்திரப் பிரசித்தி பெற்ற தமிழரின் தலைநகரான திருமலை சிதைக்கப்பட்டது. தமிழரின் பண்டைய பண்பாட்டு நகரான மட்டக்களப்பு அகதிகளின் நகரானது. வடக்கில் தமிழரின் கலாசார மையமான யாழ்ப்பாணம் வெளியுலகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு, திறந்தவெளிச் சிறைச்சாலையாக மாற்றப்பட்டது.

## எமது போராட்டத்தைத் தவறாகவே அரசு புரிந்து கொள்கிறது

மொத்தத்தில், சிங்கள அரசின் தமிழின அழிப்புப்போர் தமிழரின் நிம்மதியான வாழ்வைக் கெடுத்து, தமிழரை அகதிகளாக்கி, தமிழரின் சமூக, பொருளாதார வாழ்வைச் சிதைத்து, தமிழருக்கு என்றுமில்லாத பேரவலத்தைக் கொடுத்திருக்கிறது. எமது தாய்நிலம் ஒருபுறம் சிங்கள இராணுவப் பேயாட்சிக்குட் சிக்கிச்சீரழிய, மறுபுறம் உயர்பாதுகாப்பு வலயங்கள், விசேட பொருளாதார வலயங்கள் என்ற பெயரில் வேகமாகச் சிங்களமயப்படுத்தப்படுகிறது. சிங்கக் கொடிகளை ஏற்றியும் சித்தார்த்தன் சிலைகளை நாட்டியும் வீதிகளுக்குச் சிங்களப் பெயர்களை மாற்றியும் பௌத்த விகாரைகளைக் கட்டியும் சிங்கள மயமாக்கல் கடுகதி வேகத்திலே தொடர்கிறது. இதன் உச்சமாக, தமிழீழத்தின் தென் மாநிலம் முழுவதிலும் சிங்களக் குடியேற்றங்கள் காளான்கள் போன்று அசுர வேகத்திலே முளைத்துவருகின்றன.

அநீதியான யுத்தம் ஒன்றை நடத்தி, பொருளாதாரத் தடைகளை விதித்து, போக்குவரத்துச் சுதந்திரத்தை மறுத்து, தமிழரைக் கொன்று குவித்து, இலட்சக்கணக்கில் இடம்பெயர வைத்துவிட்டு, தமிழின ஆன்மாவை ஆழமாகப் பாதித்த இந்தச் சோகமான நிகழ்வைச் சிங்களத் தேசம் வெற்றிவிழாவாகக் கொண்டாடி மகிழ்கிறது. தமிழரைப் போரில் வென்றுவிட்டதாகப் பட்டாசு கொளுத்தி, வாணவேடிக்கைகள் காட்டி ஆர்ப்பரிக்கிறது. கிழக்கு மீதான முற்றுகைவலயம் முற்றுப்பெற்றுவிட்டதாகவும் யாழ்ப்பாணத்தின் கழுத்தைச் சுற்றி முள்வேலியை இறுக்கிவிட்டதாகவும் சிங்கள இராணுவத் தலைமை எண்ணிக்கொண்டது. பொத்துவில் தொடக்கம் புல்மோட்டை வரை, கிழக்குக் கரையோரம் முழுமைக்கும் விலங்கிட்டு விட்டதாகச் சிங்களப் பேரினவாதம் திமிர்கொண்டது. புலிகளுக்கு எதிரான போரிற் பெருவெற்றி ஈட்டிவிட்டதாகச் சிங்கள ஆட்சிப்பீடம் திருப்திகொண்டது.

## மீண்டும் நில அபகரிப்பு என்ற பொறிக்குள் விழுந்துள்ளது சிங்களம்

எமது விடுதலை இயக்கத்தையும் எமது விடுதலைப் போராட்டத்தையும் சிங்களத் தேசம் எப்போதும் தவறாகவே புரிந்துகொள்கிறது. குறைத்தே மதிப்பீடு செய்கிறது. பூகோள அமைப்பையும் புறநிலை உண்மைகளையும் மிகவும் துல்லியமாகக் கணிப்பிட்டு, எதிரியின் பலத்தையும் பலவீனத்தையும் சரியாக எடை போட்டு, எதிர்விளைவுகளை மதிப்பீடு செய்து, இவற்றின் அடிப்படையிலேயே நாம் எமது போர்த்திட்டங்களைச் செயற்படுத்துகிறோம். எதிரியின் யுத்த நோக்குகளையும் உபாயங்களையும் முன்கூட்டியே தீர்க்கதரிசனமாக அனுமானித்தறிந்தே, எமது போர்த்திட்டங்களை வகுக்கிறோம். இப்படித்தான் கிழக்கிலும் எமது போர்த்திட்டங்களை வகுத்தோம். தற்காப்புத் தாக்குதல்களை நடாத்தியவாறு தந்திரோபாயமாகப் பின்வாங்கினோம். புலிகளின் தேசத்தில் அகலக்கால் நீட்டுவதும் நீட்டிய காலை நிலையாக வைத்திருப்பதும் எத்தனை ஆபத்தான விவகாரம் என்பதை சிங்களம் 'ஜெயசிக் குறு' சமரிற் கற்றறிந்திருக்கலாம். ஆனால், சிங்கள இராணுவம் நாம் விரித்த வலைக்குள் வகையாக விழுந்து, பெருந்தொகையில் படையினரை முடக்கி, ஆளில்லாப் பிரதேசங்களை இன்று ஆட்சிபுரிகிறது. நில அபகரிப்பு என்ற பொறியிற் சிங்களம் மீளமுடியாதவாறு மீளவும் விழுந்திருக்கிறது. இதன் பாரதூரமான விளைவுகளை அது விரைவிற் சந்தித்தே ஆகவேண்டிவரும்.

வரலாற்றிலே முதல்தடவையாக எமது கரும்புலி அணியினரும் வான்புலிகளும் கூட்டாக நடாத்திய 'எல்லாளன்' நடவடிக்கை சிங்கள இராணுவப்பூதத்தின் உச்சந்தலையிலே ஆப்பாக இறங்கியிருக்கிறது. இந்த மண்டை அடி சிங்களம் கட்டிய கற்பனைகள் கண்டு வந்த கனவுகள் அத்தனையையும் அடியோடு கலைத்திருக்கிறது. அநுராதபுர மண்ணில் எம்மினிய வீரர்கள் ஏற்படுத்திய இந்தப் பேரதிர்விலிருந்து சிங்களத் தேசம் இன்னும் மீண்டெழவில்லை. ஈகத்தின் எல்லையைத் தொட்டுவிட்ட இந்த வீரர்களின் உயர்ந்த உன்னதமான அர்ப்பணிப்பு சிங்களத் தேசத்திற்கு ஒரு செய்தியைச் சொல்கிறது. அதாவது, தமிழனை அழிக்க நினைப்போருக்கு அழிவு நிச்சயம் என்பதோடு, இந்த மாவீரர்கள் பற்றவைத்துள்ள விடுதலைத் தீயின் எரிநாக்குகளிலிருந்து ஆக்கிரமிப்பாளர்கள் எங்கிருந்தாலும் தப்பிவிட முடியாது என்பதுதான் அது.

## தமிழின அழிப்புப் போரை மகிந்த அரசு கைவிடாது

இராணுவ அடக்குமுறை என்ற அணுகுமுறை மூலம் தமிழரின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்பதை மகிந்த அரசு இனியும் உணர்ந்துகொள்ளப்போவதில்லை. இராணுவ மேலாதிக்கத்தை எட்டிப்பிடிக்க வேண்டும், தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துச் சிங்கள மயமாக்கிவிடவேண்டும் என்ற ஆதிக்க வெறியும் சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து அகன்று விடப்போவதில்லை. தொடர்ந்தும் கோடிகோடியாகப் பணத்தைக் கொட்டி, உலகெங்கிலிருந்தும் அழிவாயுதங்களையும் போராயுதங்களையும் தருவிக்கவே மகிந்த அரசு முனைப்புடன் செயற்படுகிறது. எனவே, மகிந்த அரசு தனது தமிழின அழிப்புப் போரைக் கைவிடப்போவதில்லை.

தனது பாரிய இராணுவத் திட்டத்தையும் அதன் விளைவாகத் தமிழீழ மண்ணில் ஏற்

(07ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை, கடத்தல்கள் தொடர்கின்றன மக்கள் மத்தியில் பீதிநிலை நீடிக்கிறது

கண்காணிப்புக் குழு களநிலை அறிக்கை

கொழும்பு, நவ.28

வடபிராந்தியத்தில் பொதுவாக கள நிலைமைகள் பரபரப்பாகவே காணப்பட்டது. யாழ்ப்பாணத்தின் முன்னரங்கப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெற்றுக்கொண்டிருந்தன. இதனால் கடந்த வாரத்தில் 8 நபர்கள் சுடப்பட்டுக் கொல்லப் பட்டதாகத் தகவல் கிடைத்தது. இது பொது மக்கள் மத்தியில் தொடர்ந்தும் பீதிநிலை மையை நீடிக்கவே செய்வதாய் இருந்தது.

இலங்கைக் கண்காணிப்புக்குழு நவம்பர் 12-18 காலத்துக்கான தனது களநில, அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது. அவ்வறிக்கையில் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ள மேலும் சில தகவல்கள் வருமாறு:

கிழக்குப் பிராந்தியத்தில் கன்னியா, ஈச்சிலம்பற்று மற்றும் வாழைச்சேனை பகுதிகளில் ஆள்கள் காணாமல் போதல், படுகொலைகள் மற்றும் ஆள் கடத்தல்கள் இடம் பெறுவது குறித்து கண்காணிப்புக்குழு பெரிதும் கவலைகொண்டுள்ளது.

கடந்தவாரம் இலங்கை நாடாளுமன்றில் வரவு-செலவுத்திட்ட வாக்கெடுப்பு இடம் பெறவிருந்தமை குறிப்பிடக்கூடிய ஒரு சம்பவமாகும். இதையொட்டி தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மருமகன் கடத்தப்பட்டார். பட்ஜட் வாக்கெடுப்பின்போது அதற்கு ஆதரவாக குறித்த எம்.பியை வாக்களிக்கும்படி நெருக்குவதற்காக இப்படி செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. கடத்தப்பட்டவர் பட்ஜட் வாக்கெடுப்பின் பின்னர் விடுவிக்கப்பட்டார். (ப)



அண்மையில் சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற நல்லூர் செயலகப் பிரிவில் உள்ள ஆறு சிறுவர் இல்லங்களுக்கிடையிலான ஒன்றுகூடல் நிகழ்வை பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் செல்வி ச.பிறிட்ஜெட் மங்கள விளக்கேற்றித் தொடக்கி வைக்கிறார்.

# ஈரானிய அணுசக்தித் திட்டங்களுக்கு இலங்கை தொடர்ந்து ஆதரவளிக்கும்

## அங்கு சென்றுள்ள ஜனாதிபதி உறுதியளிப்பு

தெஹ்ரான்,நவ.28

ஈரானின் அமைதிக்கான அணுசக்தித் திட்டத்திற்கு இலங்கை தொடர்ந்து ஆதரவு தரும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருக்கிறார்.

ஈரானிய வெளிநாட்டமைச்சர் மனவுச்சர் மொட்டாக்கி ஈரானுக்கு விஜயம் செய்திருக்கும் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்தபோது ராஜபக்ஷ இந்த உறுதிமொழியை வழங்கினார்.

அணுசக்தியைப் பயன்படுத்துவதற்கு ஈரானுக்குள்ள விட்டுக்கொடுக்கமுடியாத உரிமையை இலங்கை ஆதரிக்கிறது என்று இலங்கை ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஈரானின் அமைதி நோக்கங்களுக்கான அணுசக்திப் பாவனை தொடர்பாகவும் சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்புடன் தீவிரமாக ஒத்துழைப்பது தொடர்பாகவுமான அறிக்கையொன்றினை ஈரானிய வெளியுறவு அமைச்சர் இலங்கை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இலங்கையுடன் சகல தரப்பிலும் ஒத்துழைக்கவும் உறவுகளில் புதிய அத்தியாயம் ஒன்றைத் தொடங்கவும் விருப்பம் கொண்டிருப்பதாக ஈரானிய வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை முஸ்லிம்களின் நிலைமை பற்றி இலங்கை ஜனாதிபதி ஈரானிய அமைச்சருக்கு விளங்கப்படுத்தினார். இலங்கை முஸ்லிம்கள் நல்ல நிலைமைகளை அனுபவிக்கிறார்கள் என்றும் அரசியல் சமூக விவகாரங்களில் துடிப்பாகப் பங்கு வகிக்கிறார்கள் என்றும் ஈரானிய அமைச்சருக்கு ராஜபக்ஷ விளக்கினார். (ப)

# ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை அனுமதி அட்டைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,நவ.28

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வலயக் கல்வி அலுவலகத்திற்கு வந்துள்ளன.

பாடசாலைகளின் அதிபர்கள் தமது பாடசாலைகளுக்குரிய அனுமதி அட்டைகளை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)

# 'புறொயிலர்' கோழி விலை உயர்வு

குருநகர்,நவ.28

யாழ்ப்பாணத்தில் 'புறொயிலர்' இறைச்சிக்கோழியின் விலை உயர்வடைந்துள்ளது.

அண்மைக் காலமாக கிலோ 560 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தது.

கடந்த வாரம் தொடக்கம் 650 ரூபாவாக உயர்த்தப்பட்டு வியாபாரிகளால் விற்பனை செய்யப்பட்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது. (203-51)

# பழுதடைந்த உருளைக்கிழங்குகள் விற்பனையில் உள்ளதாக மக்கள் விசனம்

குருநகர்,நவ.28

பழுதடைந்த உருளைக்கிழங்குகள் திருநெல்வேலி மரக்கறிச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பெரிய உருளைக்கிழங்குகள் கிலோ 180 ரூபாவாகவும் சிறிய உருளைக்கிழங்குகள் 120 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இவற்றுள் பழுதடைந்த கிழங்குகள் பெருமளவில் காணப்படுகின்றன என மக்கள் விசனமடைந்துள்ளனர்.

பழுதடைந்த கிழங்குகள் உள்ளன எனத் தெரிந்திருந்தும் அவற்றை அகற்றாது விற்பனை செய்யப்படுவதாகவும் இதனால் அவசரத்தில் பொருள்களை வாங்கிச் செல்வோர் பெரும் நஷ்டங்களை எதிர் கொள்வதாகவும் பாவனையாளர் கவலை தெரிவிக்கின்றனர்.

விலை குறைவாக கிழங்குகள் விற்பனை செய்யப்படுவதால் மக்கள் அதன் தரத்தைப் பார்க்காது வாங்கிச் செல்வதாகக் கூறப் பட்டுள்ளது.

கப்பல்மூலம் எடுத்துவரப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த கிழங்குகளே இவ்வாறு பழுதடைந்த நிலையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (203-51)

# நவாலியில் சிறுவர் தினப் போட்டியில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்கள்

நவாலி,நவ.28

சர்வதேச விநாயகர் சனசமூக நிலையத்தினர் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய கவிதை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கடந்தவாரம் நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் நிலையத் தலைவர் க.இராசரத்தினம் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (203-100)

# பல்கலைக்கழகத்தில் குழுப்படம் எடுத்தல்

யாழ்ப்பாணம்,நவ.28

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருடப் பொதுக்கலை மாணவர்கள் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குழுப்படம் எடுக்கவுள்ளனர். அனைவரையும் வருகைதருமாறு கலைப்பீடமாணவர் ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார். (203)

# தீவகத்தில் மருத்துவ முககாம்

யாழ்ப்பாணம்,நவ.28

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்.போதனா வைத்தியசாலை, சிவபூமி அறக்கட்டளை மற்றும் வேலணை கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவை இணைந்து நடத்தும் பல்துறைசார் இலவச மருத்துவமுகாம் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேலணை கிராமிய வைத்தியசாலையில் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் சத்திர சிகிச்சை மருத்துவம், பெண் நோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவவியல், சயரோகம் மற்றும் சரும நோயியல்சார் மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குவர். அத்துடன் ஆய்வுகூட பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும். (203)

# உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் வீட்டுத் தோட்டச் செய்கையாளர் கௌரவிக்கப்படவுள்ளனர்

## போட்டிகளை நடத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,நவ.28

உள்ளூர் உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைவதுடன் போசணை மட்டத்தையும் மேம்படுத்தும் நோக்குடன் தேசியமட்டத்தில் சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டுக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சிறந்த வீட்டுத் தோட்டத்தைத் தெரிவு செய்வதற்கான போட்டிகளை நடத்துவதற்கு விவசாய அபிவிருத்தி கமநல சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது. போட்டிகள் தனியார் வீட்டுத் தோட்டம், மாதிரி அலுவலக வளாக வீட்டுத் தோட்டம், மாதிரிபாடசாலை வீட்டுத் தோட்டம், மாணவர் வீட்டுத் தோட்டம், உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட ரீதியான வீட்டுத் தோட்டம், மக்கள் பிரதிநிதிகளின் வீட்டுத் தோட்டம் போன்ற தலைப்புகளில் நடத்தப்படவுள்ளன.

மேற்குறித்த தலைப்புகளில் ஏதேனும் ஒன்றின் கீழ் போட்டியாளர்கள் பங்குபற்றலாம்.

வீட்டுத்தோட்டச் செய்கையாளர் நீண்டகாலத் திட்டத்தில் நடைமுறைப்படுத்துபவர்களாகவும் இயற்கைப் பசளையிடுபவர்களாகவும் இருக்கவேண்டும்.

நகர்ப்புறப் போட்டியாளர்கள் நகரசபை, மாநகரசபை எல்லைக்குள் குறைந்தது 3/4 பரப்பில் செய்கை மேற்கொண்டிருக்க வேண்டும்.

பிரதேச செயலர் மட்டம், மாவட்டமட்டம், மாகாணமட்டம், தேசியமட்டம் ஆகியவற்றில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலைமட்டப் போட்டிகள் டிசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னரும் மாவட்ட மட்டப் போட்டிகள் டிசெம்பர் 25 ஆம்திகதிக்கு முன்னரும் மாகாணமட்டப் போட்டிகள் ஜனவரி 15 ஆம் திகதிக்கும் தேசிய மட்டப் போட்டிகள் ஜனவரி 30 ஆம் திகதிக்கும் முன்னர் நடத்தி முடிக்கப்படவுள்ளன.

போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை கமநலசேவை நிலையம், பிரதேச செயலகங்கள், வலயக் கல்வி அலுவலகங்கள், யாழ்.மாநகரசபை, நகரசபைகள் ஆகியவற்றில் பார்வையிட்டு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை உரிய பிரதேச செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறும் பாடசாலை மாணவர்களை வலயக்கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும் யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (203)

# வலிமேற்குப் பிரதேச சபையின் கலாசாரமண்டபம் புனரமைப்பு

சங்கானை,நவ.28

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபம் 20 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது.

வலி.மேற்குப் பிரதேச சேயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி அடிக்கல்லை நட்டு வைப்பார்.

துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு இதற்கான நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளது. (203 - 29)




கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் சிறந்த பணியாளர்களாக தெரிவு செய்தவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. பாராட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வக்ஸலா அமிர்தலிங்கம் மற்றும் கோப்பாய் பிரிவு கால்நடை வைத்திய அதிகாரி ஆகியோருடன் சிறந்த பண்ணையாளர்களையும் படத்தில் காணலாம். (படம்: அச்சுவேலி செய்தியாளர்)

டெங்குக் காய்ச்சல்

டெங்குக் காய்ச்சலை மனிதனுக்குப் பரப்புகின்ற பிரதான நுளம்பினங்களாக ஏடிஸ் இஜிப்ரய் (Aedes aegypti), ஏடிஸ் அல்போபிக்டஸ் (Aedes albopictus) உள்ளன. இவை தவிர ஏடிஸ் ஸ்கியுரெலாரிஸ் (Aedes scutellaris), ஏடிஸ் கத்தெரினென்ஸிஸ் (Aedes katherinsis), ஏடிஸ் குயின்லான்டென்ஸிஸ் (Aedes queenslandensis) போன்ற நுளம்பினங்களும் மனிதனுக்கு டெங்கு நோயைக் கடத்துகின்றன. இந்த நுளம்பினங்கள் தூய்மையான சிறிய நீர்நிலைகளில் முட்டையிட்டுப் பெருகுகின்றன. பெண் நுளம்பு ஒரு தடவையில் 100 முட்டைகளை இடுகின்றது. ஏடிஸ் அல்லோபிக்டஸ் இன நுளம்புகள் தமது முட்டைகளுக்கும் வைரஸைக் கடத்தக் கூடியவை. நுளம்பின் முட்டைகளிலிருந்து வளர்ந்த நுளம்புகளாக மாற 10-12 நாள்களெடுக்கும்.

இவை நடுத்தர அளவிலான நுளம்புகளாகும்.

இவற்றின் பறப்பு வீச்சு 50- 100 மீற்றர் வரையான சுற்று வட்டாரம் ஆகும்.

சுகாதாரத் திணைக்களம்

care

Disasters Emergency Committee

(சி/54392)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தரத்திற்கான புலமைப் பரிசில் பரீட்சையில்151 புள்ளிகளைப் பெற்ற கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஸ்ண வித்தியாலய மாணவியான சின்னத்துரை புலேந்திரன்-தர்மநாயகி தம்பதியரின் புதல்வி

**செல்வி ஜெஸ்மி**

கன்பொல்லையைப் பிறப்பிடமாகவும் விக்கி னேஸ்வரா வீதி, கரவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டவர். யா/விக்கினேஸ்வரா கல்லூரி பழைய மாணவியுமான இவர் பாடசாலை மட்டத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் இவர் உயர் கல்வியில் சிறப்புறச் சித்திகள் பல பெற்று சீரும் சிறப்புடன் வாழ இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அப்பம்மா, அக்காமார், அண்ணன்மார், அண்ணிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உறவினர்கள். (68317)

## எழுவைதீவு இறங்குதுறை வீதி நிதி ஒதுக்கப்பட்டும் திருத்தப்படவில்லை


நல்லூர்,நவ.28

எழுவைதீவு இறங்குதுறை பால வீதியை அகலமாக்கும் பணிக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதும் இதுவரை அதற்கான வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

வீதிப் புனரமைப்புப் பணிகள் இடம்பெறாத நிலையில் பால வீதியால் செல்லும் பாதசாரிகளும் வாகன்ங்களில் செல்வோரும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதி திருத்த வேலைகளுக்கென 2 லட்சத்து 50ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளபோதும் வீதி திருத்தப் பணிகள் குறித்து இதுவரை நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனம் எடுத்து திருத்தப்பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள முன்வர வேண்டும் என எழுவைதீவு மக்கள் கேட்டுள்ளனர். (203-111)

## ஓராம் மாத நினைவில்



அமரர் **பண்டாரி மார்க்கண்டு**

மண்ணில் 06-03-1942 மனங்களில் 29-10-2007

ஆலம் விழுதுகள் போல் உறவுகள்
ஆயிரம் இருந்துமென்ன
வேரென நீரிருந்தீர் அதில் நாம்
வீழ்ந்து விடாதிருந்தோம்.

அன்பு, பண்பு, பாசம், கல்வி, பொருளாதாரம், எமக்களித்த தெய்வத்திற்கு பலகோடி கண்ணீர்ப் பூக்களை அஞ்சலிக்கின்றோம்.

கைதடி வடக்கு, கைதடி. (68195)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/54169) (குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)

## வீடும் காணியும் விற்பனைக்கு

குப்பிளான் தெற்கில் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் குப்பிளான் வடக்கில் 7 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: இளையதம்பி இரத்தினம்மா,
கேணியடி, குப்பிளான் தெற்கு.
தொலைபேசி இல.: 077 9779718 (68337)

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 29.11.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

**ராஜீவ்**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (68158)

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
### 2008ஆம் ஆண்டிற்கான
## மீள்கேள்வி அறிவித்தல்

இதே பத்திரிகையில் 06.11.2007ஆம் திகதி எம்மால் வெளியிடப்பட்ட பின்வருவனவற்றிற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. மாட்டிறைச்சிக்கடை, வல்வெட்டித்துறை
2. மரக்கறிச் சந்தை, வல்வெட்டித்துறை
3. துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் (வல்வெட்டித்துறை பொதுச்சந்தை)
4. தொண்டைமானாறு பேரூந்து நிலையச் சிற்றுண்டிச்சாலை

இவ்விடயம் தொடர்பான மேலதிக விவரங்களை 06.11.2007ஆம் திகதிய விளம்பரத்திலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம். ஆகக் குறைந்த கேள்வித்தொகையாக முன்னைய விளம்பரத்தில் உள்ள தொகையில் 5% குறைக்கப்பட்டுள்ளது.

கேள்விப்படிவம் வழங்குதல்: 07.12.2007 மு.ப.10 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றல்: 07.12.2007 நண்பகல் 12 மணிவரை
கேள்விப்படிவம் திறத்தல்: 07.12.2007 பி.ப. ஒரு மணி

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
26.11.2007 (சி/54496)

கு.அமிர்தலிங்கம்,
செயலாளர், நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

## மரண அறிவித்தல்



*சிவசுப்பிரமணியம் மனோகரன்*

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் மனோகரன் 26.11.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சறோஜினிதேவியின் பாசமிகு கணவரும் சிவசுப்பிரமணியம் - லீலாவதி தம்பதியரின் அன்பு மகனும் மாசிலாமணி - இராசமணி தம்பதியரின் மூத்த மருமகனும் குலராசா, சிவராசா, ராகினிதேவி, மாலினிதேவி, தர்மபாலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்** (மா.இராசமணி).
பெரியமதவடி, உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (68335)

## மரண அறிவித்தல்

*திருமதி அருளம்பலம் மகேஸ்வரி*



நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி அருளம்பலம் 26.11.2007 திங்கட்கிழமை இறையடி அடைந்தார்.

அன்னார் நன்னித்தம்பி அருளம்பலத்தின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருளானந்தசிறி (சிறி - குரு டீசல் எஞ்ஜினியர்), திருஞானசோதி (ஞானம் - முன்னாள் I.T.Park செயலாளர், சமூக அபிவிருத்தி மன்றம், தலைவர், நீர்வேலி வடக்கு மகளிர் சங்கம்), சச்சிதானந்தசிவம் (U.K.), சௌந்தரசோதி (U.K), கலாயோதி (கொலன்ட்), சண்முகவடிவேல் (டென்மார்க்), பிரேமச்சந்திரன் (U.K), பிரபாகரன் (ஜீவன் - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் கிரியாசக்தி, குணேந்திரன் (சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்), சிவாபாலன் (U.K), வசந்தகல்யாணி (U.K), மகேந்திரன் (கொலன்ட்), ஜெனிற்றா (டென்மார்க்), ஜெகதீஸ்வரி (U.K), மகிஞ்சலா (கொழும்பு) ஆகியோரின் மாமியும் யதுபாலன் (மாணவன் - சென்.ஜோன்ஸ் கல்லூரி), நிருபா (மாணவி - வேம்படி மகளிர் கல்லூரி), தாட்சாயினி, கார்த்திகன், கெலின், மெலனி, ஸ்ரெபெனி, லக்ஸ்மிபிரியா, சிறீராம், லக்சன், ஜதீசன், அபிசன், கிருஷ்ணா, கீர்த்தனா, சிறீராம் ஆகியோரின் பேர்த்தியும் திருமதி பூபாலசிங்கம் - தங்கராணி (பேபி)இன் சிறியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2007) புதன் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி சீயாகாடு இந்துமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (68338)

**ந.அருளம்பலம்** (கணவர்),
**இ.குணேந்திரன்** (மருமகன்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 04 1942 — உதிர்வு 10 12 2006



அமரர் **செல்லத்துரை குகநாதன்** (தவம்)

(முன்னாள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கொள்வனவு உத்தியோகத்தரும் செல்வநாகபூஷணி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தாவும்)

அன்பால் எம்மைக் காத்து ஆசையாய் வளர்த்தெடுத்து
அவனியில் நாமுயர வழிகள் செய்து
ஆளாக்கி அரவணைத்த அன்புத் தந்தையே!
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன?
அவை அனைத்தும் - உங்கள் அன்புக்கு ஈடாகுமோ?
காலமெனும் நெடும் கடலில் கனவுடனே காத்திருப்போம்
ஞாலமிது இருக்கு மட்டும் உம் வரவைப் பார்த்திருப்போம்
செல்வநாகபூஷணியின் பாதங்களைப் பணிகின்றோம்!

108, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (68304)

மனைவி, மகன், மகள், மருமகன்.

## இறைச்சிக்கோழி

3 கிலோவிற்கு மேற்பட்ட புறொயிலர், கல்பேட், சேவல் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.
(சுத்தம் செய்தல் இலவசம்)
1]NEW R.S.K. பாம்
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
2]NEW R.S.K. பாம்
கே.கே.எஸ்.றோட், சுன்னாகம்.
(கொமர்ஷல் வங்கி அருகில்)
(68292)

## COMPUTER EXPRESS
### INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007** 80% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science, 4 Months, ~~8,250~~/= 1,650/= | Honours Diploma in Computer Science, 5 Months, ~~10,500~~/= 2,100/= | Diploma in Web page Designing, 4 Months, ~~8,250~~/= 1,650/= |
| Diploma in Graphic Desining, 4 Months, ~~8,250~~/= 1,650/= | Diploma in Desktop Publishing, 4 Months, ~~7,250~~/= 1,450/= | Diploma in Hardware Engineering, 3 Months, ~~7,250~~/= 1,450/= |
| Diploma in Auto CAD, 3 Months, ~~7,250~~/= 1,450/= | Diploma in Microsoft Office, 3 Months, 1,000/= | Accounting Package, 3 Months, ~~8,250~~/= 1,650/= |

**50% Off ADVANCE COURSES**

Diploma in Multimedia ~~5500~~ 2750
Diploma in Video Editing ~~6500~~ 3250

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I :30/11/2007 10AM
Batch II :01/12/2007 09AM
Batch III :02/12/2007 09AM
Batch IV: 05/12/2007 10AM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான ஆய்வுகூடம் இல்லாதபோதும் வகுப்பறையில் மாணவர்களின் ஆய்வுக்கல்வி! பழைய மாணவரின் உதவியுடன் கணனிக்கல்வி!!

சங்கானைக் கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட அராலி மேற்கு சரஸ்வதி வித்தியாலயம் அராலியில் சுமார் நான்கு கிலோ மீற்றர் சுற்றாடலில் உள்ள மாணவர்களை உள்ளடக்கிய பாடசாலையாக உள்ளது.

தரம் 1 இல் இருந்து தரம் 11 வரையான வகுப்புகளைக் கொண்டுள்ள இப்பாடசாலையில் 406 மாணவ, மாணவிகள் கல்விகற்கின்றார்கள். பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்ற நிலை இப் பாடசாலையிலும் காணப்படுகின்றது.

தற்போது அதிபராக இருப்பவர் நான்கு வருடங்களுக்கு முன்னர்தான் பாடசாலை அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார். இவருடைய வருகையைத் தொடர்ந்து ஆரம்பப் பிரிவில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. தரம் 1, 2, 3 ஆகிய வகுப்புகளில் ஒவ்வொரு வகுப்பிலும் இரு பிரிவுகள் உள்ளன. ஆரம்பப் பிரிவில் 219 மாணவர்களும் இடைநிலையான தரம் 6 முதல் 9 வரை 122 மாணவர்களும் மேற்பிரிவான



புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவிகள்


தரம் 10, 11 இல் 65 மாணவர்களும் கல்வி பயில்கின்றார்கள்.

ஆரம்ப ஆசிரியர்கள் 8 பேரும் ஏனைய ஆசிரியர்கள் 9 பேருமாக 17 பேர் உள்ளனர். இதனைவிட சித்திரம், விவசாயம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் மூன்றுநாள் இப்பாடசாலையிலும் இரண்டு நாள் வேறு பாடசாலையிலும் கற்பித்து வருகின்றார்கள்.

அதிபர் சோமசேகரம் தெரிவித்ததாவது:

எமது பகுதியைப் பொறுத்தவரையில் தனியார் கல்வி நிலையங்கள் இல்லை. சிலர் தனிப்பட்ட முறையில் மாலை நேரங்களில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். குறிப்பாகக் கடந்த பத்துவருடங்களுக்கு மேலாக வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் சிவஞானபோதம் தரம் 9, 10,11 மாணவர்களுக்கு இலவசமாக சமூகக்கல்வி, தமிழ் ஆகிய பாடங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்.

இதனைவிட எமது பாடசாலை மாணவர்களின் கல்வியில் அதிக அக்கறையை ஆசிரியர்களே காட்டிவருகின்றார்கள் - என்




றார் அதிபர்.

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பெரும்பான்மையான பாடசாலைகள் ஆரம்பப் பிரிவு ஆங்கில ஆசிரியர்கள் இன்றி இயங்கிவருகின்றன. இப்பாட

## அராலி சரஸ்வதி வித்தியாலயத்தின் சமகாலக் கல்விப் பணியின் பதிவு இது

சாலையைப் பொறுத்தவரையில் அந்தக் குறையைத் தாமே தீர்த்துக் கொண்டுள்ளனர்.

பழைய மாணவர்களின் நிதி உதவியில் நியமனம் செய்யப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியர் தரம் 1 இல் இருந்து தரம் 9 வரைக்கும் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றுவதுடன், யாழ். பல்கலைக் கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா மாணவனாக அவர் உள்ளமையால் உடற்கல்வியையும் கற்பித்து வருகின்றார்.

இப் பாடசாலையில் இருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய சிற்றம்பலம் ஹாருணி 149 புள்ளிகளையும், சுந்தரராஜ்மீரா 148 புள்ளிகளையும் பெற்று சித்தி அடைந்துள்ளார்கள்.

இந்த இருமாணவிகளும் தொடர்ந்து இப்பாடசாலையிலேயே கல்வி கற்க முடிவு செய்துள்ளார்கள்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு 20 மாணவர்கள் தோற்றி இருவர் சித்தி அடைந்துள்ளார்கள்.

இப்பாடசாலையைச் சுற்றி ஐந்து பாடசாலைகள் காணப்படுகின்றன. ஒரு பாடசாலை தரம் 11 வரையும், 2 பாடசாலைகள் தரம் 1 - 9 வரையும், 2 பாடசாலைகள் தரம் 1-5 வரையும் வகுப்புகளைக் கொண்டுள்ளன.

நடன ஆசிரியர், உடற்கல்வி, ஆரம்பப் பிரிவு ஆங்கில ஆசிரியர்களின் பிரச்சினையென்பது முக்கிய பிரச்சினையாக உள்ளது. அவற்றுக்குத் தற்போது தொண்டர் ஆசிரியர்களே உள்ளனர். நிரந்தர ஆசிரியர்கள் இல்லை.

கடந்தாண்டு ஜி.சி.ஈ.சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறும் நல்லமுறை யில் அமைந்துள்ளது. 21 மாணவர் கள் தோற்றிப் 13 மாணவர்கள் உயர் தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளார்கள். இம் மாணவர்கள் தமது உயர்தரக் கல்வியைத் தொடர வட்டுக்கோட்டையில் உள்ள பிரபல பாடசாலைகளை நாடுகின்றார்கள்.

எனவே அயலில் உள்ள மற்றப்




பாட சாலைகளையும் கருத்தில் கொண்டு இப்பாடசாலையில் உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்கக் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் அப் பகுதிப் பெற்றோர் தெரிவிக்கிறார்கள்.

இப்பாடசாலையில் கல்விகற்கும் பிள்ளைகளின் பெற்றோரில் பெரும்பாலானோரின் பொருளாதார நிலை கல்வி நிலை ஆகியன மிகவும் பின் தங்கியதாகவே உள்ளது. இதன் காரணமாகப் பிள்ளைகள் சீரான முறையில் பாடசாலைக்கு அனுப்பிவைக்காத நிலை காணப்படுகின்றது.

பாடசாலையில் விஞ்ஞான ஆய்வுகூடம் இல்லை. ஆனாலும் வகுப்பறையொன்றை ஆய்வு கூடமாக மாற்றி மாணவர்கள் தமது ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

போதிய கட்டட வசதிகள் காணப்படவில்லை. மாணவர்களுக்கான பிரார்த்தனை மண்டபமும் இல்லை. தளபாட வசதிகளும் பற்றாக்குறையாகவே உள்ளது.

கடந்தாண்டு 'யூனிசெப்' நிறுவனம் 50 சோடி மேசைகள், கதிரைகள் தருவதாகக் கூறியபோதிலும் இறுதியில் கைவிரித்துவிட்டார்கள். இதனால் தளபாடப் பிரச்சினைத் தொடர்கிறது.

போராசிரியர் சிற்றம்பலம், புண்ணிய மூர்த்தி போன்ற பழைய மாணவர்கள் பாடசாலைக்குப் பல்வேறு வகைகளில் உதவி புரிந்து வருகின்றார்கள்.

அலுவலகத் தேவைக்கு மாணவர்களின் கற்றலுக்குமான கணனிகளைப் பழைய மாணவர்கள் வழங்கியுள்ளார்கள்.

விளையாட்டு மற்றும் கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டமும் லண்டன் பழைய மாணவர்களின் உதவியுடன் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. 56 மாணவர்கள் இந்த உதவியை வருடாந்தம் பெற்று வருகின்றார்கள்.


பாடசாலையின் முகப்புத் தோற்றம்

விளையாட்டுத்துறையில் உதைப்பந்தாட்டத்தில் கோட்டம், வலயம் எனச் சாதனை படைத்துவருவதுடன் மேசைப்

-பவித்திரன் -

பந்து, கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் உட்பட தடகள விளையாட்டுப் போட்டிகளிலும் கோட்ட மட்டத்திலும் வலய மட்டத்திலும் கூடிய பெறுபேறுகளை மாணவர்கள் பெற்று வருகின்றார்கள்.

வலய மட்டத்தில் இடம்பெற்ற சித்திரப் போட்டியில் 17 இடங்களைப் பெற்று வலயத்தில் முதலாம் இடத்தைப் பெற் றுள்ளது இப்பாடசாலை.

இம்முறை வலய மட்டத்தில் இடம் பெற்ற ஆங்கில தினப்போட்டியில் 4 ஆம் தரத்தைச் சேர்ந்த கு.தேவ அனுசியா 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இப்பாடசாலையின் தேவைகள் வசதிகளைக் கல்வித் திணைக்களம் கூடிய கவனம் எடுத்து பூர்த்தி செய்யுமாக இருந்தால் கிராம மட்டத்தில் ஒரு தரமான பாடசாலையை உருவாக்கிக் கொள்ளமுடியும். *

# 185 ஆவது அகவையில் கால் பதிக்கும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை

மனிதர்கள் பிறக்கிறார்கள், வாழ்கிறார்கள், மடிகிறார்கள். எவரொருவர் நீண்ட காலம் - எண்பது வயதுக்கு மேல் - வாழ்கிறாரோ, அவரை ஆயிரம் பிறைகண்டவர் என வாழ்த்துகின்றோம்.

அதுபோலவே பாடசாலைகள் பல தோன்றுகின்றன. சில பாடசாலைகள் தோன்றிய வேகத்திலேயே மறைந்து போகின்றன. சில எந்த முன்னேற்றமும் இன்றி இயங்குகின்றன. அதைவிடக் கீழ்நிலையுற்றுத் தளர்ந்துபோன பாடசாலைகளும் உள்ளன. மனித வாழ்வைப் போலவே ஒரு பாடசாலையின் நிலைத்திருத்தலும் சவால் நிறைந்ததே!

நூற்றாண்டுப் பாரம்பரியம் மிக்க விரல் விட்டு எண்ணக் கூடிய பாடசாலைகளில் எமது பாடசாலையும் ஒன்றென்பது நமக்குப் பெருமையான விடயமே.

இப் பாடசாலை 1823 ஆம் ஆண்டு அமெரிக்க மிஷனரியின் உதவியுடன் பாலர் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. 1834 முதல் 1843 வரையான காலத்தில் ஆர்.ஜே.எக்காட் அவர்களின் மேற்பார்வையில் முதற்தர பாலர் பள்ளிக்கூடமாக இயங்கியது. கில்லிஸ் அம்மையாரின் நிர்வாகத்தில் அவரது பெருமுயற்சியால் 1868 முதல் 1880 வரையான காலத்தில் விடுதி வசதியுடன் கூடிய பெண்கள் பாடசாலையாகப் படிமலர்ச்சி அடைந்தது.




1918 ஆம் ஆண்டு போதகர் அல்பிரெட் கந்தையா அவர்களின் காலத்தில் ஆங்கிலப் பாடசாலையாக மாற்றமுற்றது. அக்காலத்தில் கே.பி.ஜோன் அவர்கள் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்று பாடசாலையை வழிநடத்தினார். அவரைத் தொடர்ந்து எல்.வி.சின்னத்துரை அவர்களின்வழிநடத்தலில் பாடசாலை இயங்கியது.

1939 ஆம் ஆண்டில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை என்ற பெயருடன் துவிபாஷா (தமிழ், ஆங்கிலம்) விடுதிப் பாடசாலையாகவும் விளங்கி யது. இக்காலத்தில் திருமதி புளோறோ கனகதுங்கம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்று (1939 - 1947) பல துறைகளிலும் கல்லூரியை வளரச் செய்தார்.

இவரைத் [illegible] செல்வி கிருபை[illegible] அவர்கள் கல்லூரியைப் புதிய தோற்றத்துடன் மிளிரச் செய்தார். பல புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. சிறந்த பெண்கள் பாடசாலையாகவும், ஆங்கிலப் பாடசாலையாகவும் விளங்கியது இவரது காலத்திலேயே ஆகும். அத்துடன் அரசாங்கப் பாடசாலையாகச் சுவீகரிக்கப்பட்டு 1A பாடசாலையாகவும் விளங்கியது.

அடுத்து செல்வி சரவணமுத்து, திருமதி காயத்திரி கணேசன் ஆகியோர் அதிபர்களாக இருந்தனர், 1972 ஆம் ஆண்டின் பின்னர் திருமதி க.ஆறுமுகதாசன் அவர்களது காலத்திலும் பாடசாலை பல்வேறு அபிவிருத்திகளைக் கண்டது.

1986 இன் பின்னர் முறையே திருமதி மு.சுப்பிரமணியம், திருமதி தே.தம்பிராசா, திருமதி வி.சிவபாக்கியநாதன், திருமதி க.சண்முகநாதன் (பதில் அதிபர்), திருமதி செ.மகாலிங்கம், திருமதி ஆ.சிவஞானசுந்தரம் ஆகியோர் அதிபர்களாக விளங்கினர். 1992 இல் செல்வி போ.கந்தசாமி அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார். அக்காலப் பகுதியில் இடம்பெற்ற 'முன்னேறிப்பாய்தல்'' இராணுவ நடவடிக்கை காரணமாகப் பாடசாலைக் கட்டடங்கள் அழிந்து போயின. மக்களோடு மக்களாகப் பாடசாலையும் இடம் பெயர்ந்தது. மிகுந்த சிரமத்தின் மத்தியில் கட்டடங்களோ தளபாடங்களோ இல்லாமல் ஒவ்வொரு இடங்களாக மாறி மாறி பாடசாலையை இயங்க வைப்பதில் அதிபர் பட்ட பாடுகள் சொல்லில் அடங்காதவை. இவ்வாறு இடம்பெயர்ந்து வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, சித்தன்கேணியிலுள்ள தனியார் வீடு, மானிப்பாய் மகளிர் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் பல வசதியீனங்களுடன் பாடசாலை இயங்கியது.

1996 இல் மீள்குடியேற்றம் இடம் பெற்றவேளை பற்றைகளும், மதிவெடிகளும் சூழ்ந்திருந்த பாடசாலைக்குள் அஞ்சாமல் சென்று அவற்றை அகற்றி பாடசாலையை இயங்கச் செய்தார். செல்வி போ.கந்தசாமி அவர்கள் 2004 இல் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து திருமதி கி.சிவராஜா அவர்கள் பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்று தொடர்ந்து வழிநடத்தி வருகிறார். பாடசாலையில் புதிதாக இரு மாடிக்கட்டடம் கட்டப்பட்டு பல கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. ஆயினும் பௌதீகவளங்களில் தன்னிறைவற்ற நிலையிலேயே எமது பாடசாலை இயங்கிக்கொண்டிருக்கிறது. வட மாகாணத்தில் முன்னணிப் பெண்கள் பாடசாலையாகச் சுபீட்சமான நிலையை அடையும் தொலைநோக்கோடு அது நடைபயில்கிறது. அதைச் சாத்தியமாக்கும் பொறுப்பு பண்மகளின் புத்திரிகள் ஒவ்வொருவரதும் கைகளில்தான் இருக்கிறது.

(நன்றி: பண்மகள்) *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரியில் வர்த்தக நிலையம் மீது குண்டு வீச்சு

யாழ்ப்பாணம்,நவ.28

சாவகச்சேரி, டச்சுவீதியில் வர்த்தக நிலையம் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைக்குண்டு வீச்சு இடம்பெற்றது.

குண்டுவெடித்ததில் வர்த்தக நிலையத்தின் கதவுகள் சேதமடைந்ததுடன் உள்ளிருந்த வெதுப்பகப் பொருள்களும் சேதமடைந்தன.

சாவகச்சேரி ஐங்கரன் வெதுப்பகத்திற்கு அருகில் உள்ள வர்த்தக நிலையமே சேதமடைந்ததாகும்.

இச்சம்பவம் தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (1-207)

## கண்ணீர் அஞ்சலி



**தோல் வைத்திய நிபுணர்**
**திருமதி**
**குரைஞ்சிதம் குகதாஸின்**
**மறைவுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.**
**தோல்சிகிச்சைப் பிரிவு,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(68339)

## University of Jaffna

**Invitation to submit Expression of Interest (EOI) for creating Data Base Management System for information regarding lodging and accommodation facility for the undergraduates**

Expression of interest for creating a database management system for availability of lodging and accommodation facilities for the undergraduates is invited from individual(s) / Firms.

The Bid documents can be obtained from the Local Technical Secretariat (LTS), IRQUE project, University of Jaffna up to 12th December 2007 at 2.00 pm on submission of the receipt for the payment of non-refundable Deposit of Rs 200.00 made at the LTS.

Expression of Interest should be sent in sealed cover mentioning the "EOI for creating DBMS" at the top left corner of the envelope reachable to the under signed on or before 14th December 2007 at 2.00 pm.

**Director**
**L TS / University of Jaffna**
**26.11.2007**

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22.03.1941 மறைவு 26.11.1991

எமது குடும்பத் தலைவர்

**அமரர் செல்லத்துரை கனகசபாபதி**

முன்னாள் உதவி அரசாங்க அதிபர்(A.G.A.), ஒட்டிசுட்டான்

திதி : கார்த்திகை மாத அபர பக்கப் பஞ்சமி 28.11.2007 புதன்கிழமை

இமைப் பொழுதும் எம்நெஞ்சில் நீங்காத் திருமலரே!
உங்கள் நல்லாற்றுப்படுத்தலுக்காய் நாளும் துதி செய்வோம்!

அரசகேசரி விநாயகர் வீதி,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் ஆறுமுகம் சண்முகநாதன்**

*(இளைப்பாறிய முகாமையாளர், மக்கள் வங்கி)*

**மலர்வு 10 - 11 - 1939**
**உதிர்வு 27 - 11 - 2000**



ஆண்டு ஏழு ஆகியதோ அப்பாவே! நீர் பிரிந்து
ஆறவில்லை எம்துயரம். அழுதழுது நிற்கிறோம்.
மீண்டு நீர் வருவீரோ மிகைமகிழ்வு தாரீரோ!
இராணுவ வாகனத்தில் ஏறிவந்த காலனவன்
உம் இன்னுயிர் கவர்ந்தானோ, மறுகுதே எம்மனது!

**இல.50, விவேகானந்தா றோட்,**
**வெள்ளவத்தை, கொழும்பு.** (68348)

*பிரிவால் துயருறும்:*
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

## வீடு வாடகைக்குத் தேவை

**ஆசிரியர்கள் குடும்பம் (4) தங்குவதற்குரிய வீடு நகர எல்லைக்குள் தேவை**
**தொடர்பு: 021 4590716**
**4 மணிக்குப் பின்னர்.**

## தவறிவிட்டது

**யாழ்.நகர், கஸ்தூரியார் வீதி, பகுதியில் NP GQ 2333 இலக்க மோட்டார் சைக்கிளுக்குரிய ஆவணங்கள் அடங்கிய சிறிய பாக் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து *தமயந்தி சிவராஜா, பழம் வீதி, ஆறுகால் மடம்* என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

T.P.: 021 222 9410, 0773564967. (68355)

## மரண அறிவித்தல்கள்

### அருளானந்தம் அல்பிரட் (பாலசிங்கம்)

**(புனித வளன் கத்தோலிக்க அச்சக முன்னாள் ஊழியர்)**



கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் அல்பிரட் நேற்று (27.11.2007) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்ற அருளானந்தம் - மரியம்மா தம் பதியினரின் அருமை மகனும் காலஞ்சென்ற மேரிபிளோமினா (தங்கச்சியம்மா)வின் அன்புக் கணவரும் அ.ஸ்ரீபனின் (லண்டன்) பாசமிகு தந்தையும், பமிலா (சந்திரா-லண்டன்) வின் மாமனாரும் டன்சி, டன்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற திரேசம்மா, மரியதாஸ் ஆகியோரின் சகோதரனும், குணேந்திரன் - கொன்செப்ரா (புனித வளன் கத்தோலிக்க அச்சகம்), மங்களதாஸ், அன்ரனிதாஸ், எக்மென்றா (லண்டன்) ஆகியோரின் தாய் மாமனுமார்

அன்னாரின் பூதவுடல் இன்று (28.11.2007) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு றக்கா வீதி, புனித திரேசாள் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுத்து நல்லடக்கத்துக்காகப் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.மங்களதாஸ் ,
கு.கொன்செப்ரா
(மருமக்கள்)

*இல.5, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.* (68401)

### நடராசா குணநாயகி

சித்தன்கேணியைச் சேர்ந்த நடராசா குணநாயகி (26.11.2007) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நடராசா (ஓய்வுபெற்ற நடேஸ்வராக் கல்லூரி, கோட்டக் கல்வி லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராசா - நேசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் தவனேஸ்வரி, ஸ்ரீபாலச்சந்திரன், சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அகிலன் (ஜேர்மனி), வனஜா (சுவிஸ்), டாக்டர் சொரூபி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீபவனின் மாமியும் பவன்யா, லக்சன் ஆகியோரது அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (27.11.2007) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*தாவடி.* அ.நடராசா (கணவர்)

(சி/54501)

### புதில் கிராமசேவையாளரால் நிவாரண அட்டை விநியோகம்

நவாலி, நவ.28

ஆனைக்கோட்டை ஜே/133கிராமசேவையாளர் பிரிவில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணத்திற்கான வெள்ளை நிற அட்டைகள் தற்போது அப் பிரிவு பதில் கிராம சேவையாளர் த.நாகராசவினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை காலமும் கிராம சேவையாளர் இதனை விநியோகித்து வந்துள்ளார். (203-100)

## துரித மீட்டல் ICT மாணவர் கையேடு

**மிகக் குறைந்த விலையில் ICT பாடத்திட்டத்திற்கு அமைவாக ஆக்கப்பெற்ற இக்கையேடு**

- **IT பற்றிய அறிவை பெறுபவர்களுக்கு**
- **ICT பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு**
- **ICT பாடத்தை பயிலும் மாணவர்களுக்கு**
- **விசேடமாக க.பொ.த.சாதாரண பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு மிகச் சிறந்தது.**

தொடர்புகளுக்கு: **இளைஞர் கணனி சேவைகள்**
15A சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம்.
Te.: 060 221 4927.

(68342)

## மரண அறிவித்தல்கள்

### க.ம.செல்லத்துரை

கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட க.ம.செல்லத்துரை காலமாகிவிட்டார்.

அன்னார் முருகு - மீனாட்சியின் அன்புக் கணவரும் கமலாதேவி, இலட்சுமி, காந்தன் (கனடா), ராதாகாந்தன் (கொழும்பு- மரான் குறோசரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கங்காதரன், சந்திரவீரா, வனிதா ஆகியோரின் மாமனும் குமரதாஸ், சதீஸ்வரதாஸ், சாயிதேவதாஸ், கஜானனி, கானாப்பிரியா, அனுஷன், அனுஷியா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நேற்று (27.11.2007) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணியளவில் கரணவாய் தெற்கு இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கரணவாய் மேற்கு.* (68336) தா.கங்காதரன்.

### சங்கரப்பிள்ளை நடராசா (ஆனந்தி)



சாவகச்சேரி, கண்டிவீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை நடராசா (ஆனந்தி- மதுஜாரேடஸ்) 26.11.2007 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை- சிவபாக்கியம் தம்பதியரின் மகனும் செல்லப்பா தம்பதியரின் மருமகனும் அமரர் நாகேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும் ராதிகா (பிரான்ஸ்), கீர்த்திகா (கொழும்பு), வசீசன் (கொழும்பு) ஆகியோரின் தந்தையும் சர்வானந்தராஜா (பிரான்ஸ்), பிரபாகரன் (கொழும்பு) ஆகியோரின் மாமனும் நிரோகா, சாகுஜன், சிவானுஜன், தருணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ரஞ்சிதமலர், அமரர் செல்வராஜா, அமரர் பூமணி, கணேஸ், வளர்மதி, அமரர் கனகலிங்கம் ஆகியோரின் சகோதரரும் சங்கரப்பிள்ளை (குணம்), இந்திரா, காசிநாதர் (பட்டு), பத்மராணி, ஜெயவீரசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2007) புதன்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகச் சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

*டச்சு வீதி, சாவகச்சேரி.* (சி/54497)

### மார்க்கண்டு ஞானசுந்தரம்

**(இளைப்பாறிய வங்கி உத்தியோகத்தர், H.S.B.C.)**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாக வும் கொண்ட மார்க்கண்டு ஞானசுந்தரம் அவர்கள் நேற்று (26.11.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நாகரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற மார்க்கண்டு - சின்னம்மா தம்பதியினரின் மூத்த புத்திரனும், காலஞ் சென்ற தம்பையா - யோகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகசிங்கம், தவமணி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற வசந்தி மற்றும் ஆனந்தகுமார், ஜெயந்தி, தமயந்தி, ஞானக்குமார், உதயகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜினி, தளையசிங்கம், ஜெகசீலன், சுனிதமலர், சுபித்தா ஆகியோரின் மாமனாரும், அர்ச்சுனா, அர்ச்சனா, ஜனனி, ஜனந்தன், ஜனாலன், தினேஷ், பானுதி, யதுர்ஷன், வசந்ததீபா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்நேற்று 27.11.2007 நடை பெறவிருந்தன. தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்று (28.11.2007) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.11 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி *(பவாக்கா)*,
பிள்ளைகள்.

*கலைவாணி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (68850)

### கந்தையா வல்லிபுரம் (கப்பல்)



கட்டுவனைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வல்லிபுரம் (கப்பல்) அவர்கள் நேற்று (26.11.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் புவனபூவதியின் அன்புக் கணவரும் வசீகரன் (பிரான்ஸ்), சுதாகரன்(HNDA, முதலாம் வருடம் evening), பகீரதன், சங்கரன்(மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை மாணவர்கள்), கலைவாணி (யூனியன் கல்லூரி மாணவி), தர்சிகா(இராமநாதன் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தாதேவி (நியூசிலாந்து), சரஸ்வதி (திருகோணமலை), பரராஜசிங்கம், சின்னமணி(ஜேர்மனி), சின்னமலர்(ஜேர்மனி), குணபாலசிங்கம் (கனடா), சாந்தாதேவி (ஜேர்மனி), சாந்தகுமார்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2007) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மனைவி ,பிள்ளைகள்.

*சிங்கம் லேன், உடுவில்.* (68402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மேலாண்மைச் சிந்தனையில் வெளிப்பாடாகும் அறிவிப்புகள்

''விடுதலைப் புலிகளையும் அந்த இயக்கத்தின் தலைவர் பிரபாகரனையும் கொன்றொழிக்கப்போகின்றோம். அதன் பின்னர் அரசியல் தீர்வு காண்போம்.'' - என்று சூளுரைத்திருக்கின்றார் இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளரும், இலங்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அடுத்து பாதுகாப்புத்துறையில் அதிக அதிகாரமும் செல்வாக்கும் கொண்டவரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ.

''விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதே எங்கள் இலக்கு. நாங்கள் எப்படியும் இராணுவ ரீதியாக அவர்களைத் தோற்கடித்தாகவேண்டும். வன்னியை எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டும். அது சாத்தியமானதே. இனி, அவர்களை நசுக்குவதுதான் பாக்கி. அதன் பின்னர் அரசியல் தீர்வு சாத்தியமாகும்.'' - என்று முழங்கியிருக்கின்றார் அவர்.

ஆக, வாழ்வுரிமைக்காகவும், நீதியான வாழ்வுக்காகவும் போராடும் ஈழத்தமிழர்களுக்கு, அவர்களின் போராட்ட வடிவத்தை அழித்தொழித்த பின்னர் தாம் நீதி செய்யப்போகிறார் - அரசியல் தீர்வு வழங்கப் போகின்றார் - என்று சபதம் செய்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்.

''பயங்கரவாதத்தை அடியோடு ஒழித்த பின்னரே அரசியல் தீர்வு'' என்ற தென்னிலங்கையின் பம்மாத்து, 'அலை ஓய்ந்த பின்னர் குளிக்கலாம் என்று கடற்கரையில் காத்திருப்பதற்கு' ஒப்பானது.

ஈழத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க மறுத்து - அவர்களுக்கு நீதி செய்வதை நிராகரித்து - அந்தப் பூர்வீகத் தேசிய இனத்தை அடிமைப்படுத்தி, அடக்கி, ஒடுக்குவதில் தென்னிலங்கைப் பேரினவாதச் சிங்களம் காட்டிய தீவிரமே - இன்னும் சரியாகச் சொல்லப்போனால் பேரினவாத வெறியே - இலங்கைத் தீவில் ஆயுத வன்முறைக் கலாசாரத்துடன் கூடிய போராட்டத்துக்கு ஊற்றுக்கண்ணாக அமைந்தது.

அந்த ஊற்றுக்கண்ணை அடைக்காமல், 'பயங்கரவாதம்' என்று தென்னிலங்கை இன்று அடையாளப்படுத்திச் சித்திரிக்கும் ஆயுதப் போராட்டப் புரட்சியை அடைப்பது என்பது பகல் கனவு. அத்தகைய முயற்சி, இப்பத்தியில் நாம் முன்னர் சுட்டிக்காட்டியபடி நோயின் மூலத்துக்கு - நோயின் காரணத்துக்கு - வைத்தியம் செய்யாமல், நோயின் விளைவான வெளிப்பாட்டுக்கு - குணங்குறிக்கு - மருத்துவம் செய்வதற்கு ஒப்பானதாகும்.

ஈழத் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும், எழுபதுகளின் ஆரம்பத்திலும் ஜனநாயக வழி தழுவிய வெகுஜனப் போராட்ட வடிவமாகவே முன்னெடுக்கப்பட்டது. அந்தப் போராட்டத்தின் மையப் பொருளாகப் புதைந்து கிடந்த நியாயத்தை - நீதியை - கவனத்தில் கொள்ள மறுத்த தென்னிலங்கைப் பேரினவாதம், ஆயுத முனையில் - வன்முறை வாயிலாக - பலாத்கார நடவடிக்கைகள் மூலம் - அந்தப் போராட்டத்தை அடக்கி, ஒடுக்க முற்பட்டது. அந்தக் காரணத்தினால் அந்தத் தேசிய விடுதலை முயற்சி பின்னடைவுகளைக் கண்டது. சமாதான வழியில் தமிழர் தேசத்தை ஒன்றுபடுத்திய அந்த விடுதலை முயற்சி அதற்கு அப்பால் அந்தப் போராட்டத்தை முன்னெடுக்க முடியாமல் வன்முறை வாயிலாக ஒடுக்கப்பட்டது. அதன் காரணமாகவே ஆயுதம் தரித்த எதிர்ப்புப் போராட்டம் தமிழர் மத்தியில் வரலாற்றுப் பிறப்பை எடுத்தது.

எனவே, ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டமானது, தாங்கொணா அரச ஒடுக்குமுறையின் வரலாற்றுக் குழந்தையாகவே தோற்றம் பெற்றது. புரட்சிகர ஆயுதப் போராட்டத்தைத் தமிழர்கள் முன்னெடுக்க அவர்களைக் கட்டாயப்படுத்தி, நெட்டித் தள்ளி, பலவந்தப்படுத்தியதே தென்னிலங்கைத் தேசம்தான்.

ஆகவே, இன்று தமிழர் தரப்பில் முன்னெடுக்கப்படும் ஆயுதம் தாங்கிய உரிமைப் போராட்டமானது, அதற்கு முன்னர் ஈழத் தமிழர்கள் முன்னெடுத்த அரசியல் போராட்டங்களின் தொடர்ச்சியாகவும், நீட்சியாகவும், முன்னெடுப்பாகவுமே கருதப்பட வேண்டும்.

இந்தப் போராட்டத்தின் யதார்த்தப் புறநிலைகளையும், வரலாற்றுப் பின்னணிகளையும் சரிவர எடைபோட்டால், ஈழத் தமிழர்களை இராணுவ ரீதியாக அடக்கி, ஒடுக்கிவிடுவதன் மூலம், தமிழரின் தேசிய விடுதலை உணர்வை மழுங்கடித்து அவர்களை நிரந்தர அடிமைகளாக்கி விடலாம் என்ற திட்டம் என்றுமே சித்திக்காது என்பது சம்பந்தப்பட்டோருக்குப் புரியவரும்

ஈழத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை நாகரிகமான அமைதி வழியில் தீர்க்கும் திடசங்கற்பம் தென்னிலங்கைக்குக் கிஞ்சித்தும் கிடையாது. வன்முறை வழியிலான போரைத் தீவிரப்படுத்தி, தமிழர் தேசத்தின் மீது பெரும் படையெடுப்பையே மேற்கொண்டு, தமிழரின் ஆயுத வலிமையை நொறுக்கி, அவர்களை இராணுவப் பலம் மூலம் அடிமைப்படுத்தி மண்டியிட வைத்து, அதன் பின்னர் தான் முன்வைக்கும் உருப்படியற்ற ஒரு திட்டத்தை அரசியல் தீர்வு யோசனையாகத் தமிழர் மீது திணித்து, அதற்கு அவர்களைப் பலவந்தமாக இணங்கச் செய்வதே தென்னிலங்கையின் உள்ளார்ந்த திட்டமாகும். அதையே பாதுகாப்புச் செயலாளரின் இந்த ஒப்புதல் வாக்குமூலமும் உறுதிப்படுத்துகின்றது.

தமிழர்களை இந்தத் தீவின் பூர்வீகத் தேசிய இனமாக ஏற்று, சமபங்காளி உறவோடு அவர்களைக் கருதி, அவர்களுடன் அமைதி வழிப் பேச்சு மூலம் நல்லிணக்கத்துக்கு வரும் தாராளப் பாங்கு தென்னிலங்கையிடம் இல்லை. பேரினவாத மேலாதிக்கத் திமிரும், மேலாண்மை மமதையும், மொழிச் செருக்கும் சேர்ந்து அந்த உயர் பண்பைச் சிதைத்துச் சீரழித்துவிட்டன. அதன் காரணமாக அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தும் அதிகாரத் தொனியோடு அறிவிப்புகள் வெளிவருகின்றன. அதுவே இன்றைய துன்பியல் நிலைமை.

# யாழ். குடாநாட்டுக்குப் பொருள்கள் ஏற்ற ஈரான் கடன் வசதியில் 2 பெரிய கப்பல்கள்

கொழும்பு,நவ.28

குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான இரண்டு பாரிய கப்பல்களை ஈரானிடம் இருந்து கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனம் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தற்சமயம், ஈரானில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுற்றுப் பயணம் செய்து கொண்டிருப்பதை ஒட்டி, இந்தக் கப்பல்களை ஈரானிய கடன் வசதித் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் அங்கு முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

மேற்படி ஈரானின் கடன் வசதித் திட்டத்தின் கீழ் இரண்டு பாரிய கப்பல்களை இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனம் பெற்றுக் கொள்ளுமாயின், தற்போது வெளிநாட்டுக் கப்பல்களை உயர்ந்த வாடகைக்கு அமர்த்தியிருக்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அவற்றுக்குப் பதிலாகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் கூட்டுத் தாபனத்திடம் இந்த இரு பெரிய கப்பல்களையும் வாடகைக்கு அமர்த்தமுடியும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(சி)

# சர்வதேசம் மீது தமிழர் வைத்திருந்த......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுவரும் பேரவலங்களையும் மூடிமறைத்து, உலகத்தின் கவனத்தைத் திசைதிருப்பி, உலக நாடுகளின் உதவியையும் பேராதரவையும் பெற்றுக்கொள்ளவே மகிந்த அரசு அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவை அமைத்தது. இதனைக் கடந்த மாவீரர் நினைவுரையில் நான் தெளிவாக எடுத்துக்கூறியிருந்தேன். வருடக் கணக்கிற் காலத்தை இழுத்தடித்து, எந்த விதமான தீர்வையும் முன்வைக்க முடியாது, இறுதியில் இரண்டு மாத விடுப்பிற் பிரதிநிதிகள் குழுவினர் சென்றிருப்பது இதனையே காட்டி நிற்கிறது.

தமிழரின் தேசியப் பிரச்சினையை நீதியான முறையிற் சமாதான வழியில் தீர்த்துவைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதிப்பாடும் தென்னிலங்கையில் எந்த அரசியற் கட்சியிடமுமில்லையென்பது கடந்த அறுபது ஆண்டுகளில் தெட்டத்தெளிவாக வெளிப்பட்டிருக்கிறது. தமிழரின் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை ஆகிய மூலாதாரக் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளவும் தமிழரின் தேசியத் தனித்துவத்தை அங்கீகரிக்கவும் தென்னிலங்கைக் கட்சிகள் தயாரில்லையென்பதும் இன்று சந்தேகத்திற் கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என ஆளும்கட்சி அடம்பிடிப்பதும் தீர்வுத்திட்டமே வேண்டாம் என மஞ்சள், சிவப்புக் கட்சிகள் பிடிவாதமாக நிற்பதும் கடந்த கால நிலைப்பாடுகளிலிருந்து குத்துக்கரணம் அடித்து, அரசின் போர் நடவடிக்கைக்கும் ஆதரவு, சமாதான முயற்சிகளுக்கும் ஆதரவு எனப் பிரதான எதிர்க்கட்சி எதையும் தெளிவாகக் கூறாது இழுவல் மொழியில் நழுவிக் கண்ணாம்பூச்சி விளையாடுவதும் இதனைத்தான் தெளிவுபடுத்துகின்றன. இதன்மூலம் சிங்கள அரசியற் கட்சிகள் அனைத்தும் அடிப்படையில் தமிழின விரோதப் பேரினவாதக் கட்சிகள் என்பது சந்தேகத்திற் கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படியான இனவாதக் கட்சிகளிடமிருந்து யாரும் தீர்வை எதிர்பார்த்தால், அது அரசியல் அசட்டுத்தனமேயன்றி வேறொன்றுமன்று.

சிங்களப் படைகளின் 'அக்கினிக்கீல' என்ற பாரிய படைநடவடிக்கையைத் தவிடுபொடியாக்கி, போரிற் புலிகளை வெற்றிகொள்ளமுடியாது என்பதைச் சிங்களத் தேசத்திற்கு இடித் துரைத்தபோதுதான் அன்று சிங்களம் அமைதி முயற்சிக்கு ஆர்வம்காட்டியது. எமது உயரிய போராற்றலை வெளிப்படுத்தி, இராணுவ மேலாதிக்க நிலையில் நின்றபோதுதான் சிங்களத் தேசம் அமைதி ஒப்பந்தத்திற் கைச்சாத்திட்டது. உலக நாடுகளிலிருந்து பெற்ற தாராள நிதியுதவிகளையும் ஆயுத உதவிகளையுங் கொண்டு தனது சிதைந்துபோன இராணுவ இயந்திரத்தைச் செப்பனிட்டு, தனது இராணுவ அரக்கனைப் போரிற்குத் தயார்ப்படுத்திச் சிங்களத் தேசம் சமாதான வழியிலிருந்தும் சமரசப் பாதையிலிருந்தும் விலகித் தனது பழைய இராணுவப் பாதையிற் பயணிக்கிறது.

### அரசாங்கம் போர்நிறுத்தத்தை ஒரு தலைப்பட்சமாக முறித்துவிட்டது

மகிந்த அரசு ஒருதலைப்பட்சமாகப் போர்நிறுத்தத்தை முறித்து, தமிழர் தாயகத்தின் புவியியல் ஒருமைப்பாட்டையும் தனித்துவத்தையும் அழித்தொழிக்கும் இராணுவச் செயற்றிட்டத்தை இன்று ஈவிரக்கமின்றிச் செயற்படுத்திவருகிறது. ஆயிரக் கணக்கில் எம்மக்களைக் கொன்றுகுவித்து, கடத்திப் புதை குழிகளுக்குட் புதைத்து, பெரும் மனித அவலத்தை எம் மண்ணில் நிகழ்த்திவருகிறது. அனுசரணையாளரான நோர்வேயை அதட்டி அடக்கி வருகிறது. கண்காணிப்புக் குழுவைக் காரசாரமாக விமர்சித்துவருகிறது. தனது பயங்கரவாதத்தை மூடிமறைக்க ஐ.நாவின் உயர் அதிகாரிகளைக்கூடப் பயங்கரவாதிகளாகச் சித்திரிக்கிறது. செய்தியாளர்களோ தொண்டு நிறுவனங்களோ செயற்படமுடியாதவாறு தமிழர் தாயகத்திற் பதற்றத்தையும் பயப்பீதியையும் உருவாக்கி, உண்மை நிலைவரத்தை உலகிற்கு மறைத்துவருகிறது.

உலக நாடுகள் தமது சொந்தப் பொருளாதாரக் கேந்திர நலன்களை முன்னெடுக்கின்ற போதும் மனித உரிமைகளுக்கும் ஜனநாயக விழுமியங்களுக்கும் மதிப்புக்கொடுக்கத் தவறுவதில்லை. இந்தப் பிரபஞ்சமும் சரி, மனித வாழ்வியக்கமும் சரி, உலக உறவுகளும் சரி தர்மத்தின் சக்கரத்திலேயே இன்னமும் சுழல்கின்றன. இதனால்தான், விடுதலைக்காகப் போராடிய கிழக்குத்தீமோர், மொன்றிநீக்ரோ போன்ற தேசங்கள் சர்வதேசத்தின் ஆதரவோடும் அனுசரணையோடும் புதிய தேசங்களாக அடிமை விலங்கை உடைத்தெறிந்துகொண்டு விடுதலை பெற்றன. கொசோவோ போன்ற தேசங்களின் விடுதலைக்காகவும் சர்வதேசம் தொடர்ந்தும் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது.

### சர்வதேச நாடுகளின் நகர்வு திருப்தி தருவதாக இல்லை

இருப்பினும், எமது தேசியப் பிரச்சினையிற் சர்வதேச நாடுகளின் நகர்வுகளும் நடவடிக்கைகளும் எம்மக்களுக்குத் திருப்தி தருவனவாக அமையவில்லை. இந்நாடுகள் மீது எம்மக்கள் வைத்திருந்த நம்பிக்கை இன்று தகர்ந்து போயிருக்கிறது. இந்நாடுகளின் நடுநிலைச் செயற்பாட்டிலே இன்று பெரும் கேள்விக்குறி எழுந்திருக்கிறது. சமாதானத்திற்காக உழைத்த எமது தவப்புதல்வன் தமிழ்ச்செல்வனைச் சர்வதேசம் சமாதானம் பேசியே சாகடித்திருக்கிறது. அமைதிப் பாதையில் இயங்கிய எமது விடுதலை இயக்கத்தின் இதயத்துடிப்பை வலுக்கட்டாயமாக இழுத்து நிறுத்தியிருக்கிறது. எமது இதயங்களில் இலட்சிய நெருப்பை மூட்டி, மறைந்த மாவீரருக்கு ஆண்டுதோறும் விளக்கேற்றும்போது எப்போதும் என்னருகிருந்த எனது அன்புத் தம்பி தமிழ்ச்செல்வனுக்கும் சேர்த்து இம்முறை என்கையால் ஈகச்சுடரேற்றும் நிலைமையைச் சர்வதேசம் உருவாக்கியிருக்கிறது. உலகத் தமிழினத்தையே கண்ணீரிற் கரைத்து, கலங்கியழ வைத்திருக்கிறது.

சிங்களத் தேசத்தின் சமாதான விரோதப் போக்கை, போர்வெறியை உலக நாடுகள் உறுதியோடு கண்டித்திருந்திருந்தால், தமிழ்ச்செல்வன் இன்று உயிரோடு இருந்திருப்பான். சமாதானத்திற்கு இப்படியொரு பேரிடி விழுந்திருக்காது. சமாதானத்தின் காவலர்களாக வீற்றிருக்கும் இணைத் தலைமை நாடுகளும் இந்தப் பெரும் பொறுப்பிலிருந்து தவறியிருக்கின்றன. சமாதானத்தைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பும் தார்மீகக் கடமைப்பாடும் இந்த இணைத் தலைமை நாடுகளுக்கு இல்லையென்றால் காலத்திற்குக்காலம் இடத்திற்கிடம் அவர்கள் மாநாடு கூட்டுவதன் அர்த்தம்தான் என்ன? சிங்கள அரசிற்குச் சீர்வரிசை செய்து, ஆயுத உதவிகள் அளித்து, தமிழரை அழித்துக்கட்டத் துணை போவதுதான் இந்த நாடுகளின் உள்ளார்ந்த நோக்கமா? இத்தனை கேள்விகள் இன்று எம்மக்களது மனங்களிலே எழுந்திருக்கின்றன. எனவே, சர்வதேசச் சமூகம் இனியாவது எமது விடுதலைப் போராட்டம் தொடர்பாக நீதியான புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் என எமது மக்கள் உறுதியாக நம்புகின்றனர். இனஅழிப்பைத் தொடரும் சிங்கள அரசிற்கு இராணுவப் பொருளாதார உதவிகள் வழங்குவதை அடியோடு நிறுத்தி, சர்வதேசச் சமூகம் எமது மக்களின் சுயநிர்ணய உரிமையையும் இறையாண்மையையும் ஏற்று அங்கீகரிக்கும் என எமது மக்கள் இன்றைய புனிதநாளிலே எதிர்பார்த்து நிற்கின்றனர்.

### உலகர் கண்ணை மூடிக்கொண்டு பாராமுகமாகச் செயற்படுகிறது

எனது அன்பார்ந்த மக்களே!

நாம் பூமிப்பந்திலே வாழ்கின்ற தனித்துவமும் விசேட பண்புகளும் கொண்ட ஒரு சிறப்பு வாய்ந்த இனம். மிகவும் தொன்மை வாய்ந்த இனம். தனித்துவமான இன அடையாளங்களோடும் தேசிய இனக் கட்டமைப்போடும் வாழ்கின்ற ஓர் இனம். நீண்டகாலமாக அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் இன ஒடுக்கு முறைக்கு எதிராக, விடிவு தேடி, விடுதலை வேண்டிப் போராடிவருகிறோம். நாம் காலங்காலமாகப் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த எமது சொந்த மண்ணில், எமக்கேயுரித்தான வரலாற்று மண்ணில், அந்நியரிடம் பறிகொடுத்த ஆட்சியுரிமையை மீள நிலைநாட்டுவதற்காகவே போராடிவருகிறோம். இழந்துவிட்ட எமது இறையாண்மையை மீளநிறுவி, எமது சுதந்திரத் தேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்காகவே நாம் போராடிவருகிறோம்.

எமது மக்களின் இந்த நீதியான, நியாயமான, நாகரிகமான போராட்டத்தைச் சிங்களத் தேசம் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ள மறுத்து வருகிறது. மாறாக, எம்மண்மீதும் மக்கள்மீதும் பெரும் இனஅழிப்புப் போரை, ஆக்கிரமிப்புப் போரைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கிறது. போர் என்ற போர்வையில் மாபெரும் மனித அவலத்தை ஏற்படுத்திவருகிறது. அறுபது ஆண்டு காலமாக அநீதி இழைக்கப்பட்டு, அடக்குமுறைக்கு ஆட்பட்டு, சாவும் அழிவும் எண்ணில்லா இன்னல்களும் குடிபெயர்ந்த அகதி வாழ்வுமாக எம்மக்களின் அன்றாடச் சீவியம் சீரழிந்த போதும் எமக்காக எந்தவொரு நாடோ, எந்தவோர் அமைப்போ குரல் கொடுக்கவில்லை. ஆதரவோ அனுதாபமோ தெரிவிக்கவில்லை. உலகமே கண்ணை மூடிக்கொண்டு, பாராமுகமாகச் செயற்படுகிறது.

### விடுதலைப் பாதையிலே தொடர்ந்தும் போராடுவோம்

பூமிப்பந்தெங்கும் எண்பது மில்லியன் தமிழர் பரந்துவாழ்ந்த போதும், எமக்கென ஒரு நாடு இல்லாதமைதான் இந்தப் பரிதாப நிலைக்கு - இந்த மோசமான நிலைமைக்குக் காரணம். எனவே, எமது மாவீரர்களை நினைவுகூரும் இன்றைய எழுச்சிநாளில் உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழ்மக்கள் அனைவரையும் தமிழீழ விடுதலைக்காக உணர்வெழுச்சியுடன் கிளர்ந்தெழுமாறு வேண்டிக்கொள்கிறேன். அறிவுவளம், செயல்வளம், பொருள்வளம், பணவளம் என உங்களிடம் நிறைந்து கிடக்கும் அனைத்து வளங்களையும் ஒன்று திரட்டி, எமது விடுதலைப் போராட்டத்திற்கு நீங்கள் வழங்கிய பங்களிப்புக்களுக்கும் உதவிகளுக்கும் இச்சந்தர்ப்பத்திலே எனது அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதே போன்று வருங்காலத்திலும் நிறைந்த பங்களிப்பை வழங்குமாறு அன்போடும் உரிமையோடும் கேட்டுக்கொள்கிறேன்.

சத்திய இலட்சியத்திற்காகச் சாவைச் சந்தித்துச் சரித்திரமாவதற்கு ஆயிரமாயிரம் வீரர்கள் எமது விடுதலை இயக்கத்தில் அணிவகுத்து நிற்கும் வரை, எமக்கு முன்னால் எழு கின்ற எல்லாத் தடைகளையும் நாம் உடைத்தெறிந்து போராடுவோம். எதையும் தாங்கும் இதயத்துடனும் இரும்பையொத்த இலட்சிய உறுதியுடனும் அஞ்சாத வீரத்துடனும் எமது வீரர்கள் சமராடும் வரை, எத்தனை துயர் வரினும் எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலைப் பாதையிலே தொடர்ந்து போராடுவோம். புனித இலட்சியத்திற்காகத் தம்மையே ஆகுதி யாக்கிக்கொண்ட எமது மாவீரரை நினைவுகூரும் இன்றைய நாளில் நாம் ஒவ்வொருவரும் அந்த மாவீரரின் இலட்சியக் கனவை எமது நெஞ்சங்களிலே சுமந்து, அந்த மாவீரரின் இறுதி இலட்சியம் நிறைவுபெறும் வரை தொடர்ந்து போராடுவோம்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

- என்றார் பிரபாகரன்.

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 13 | வியாழக்கிழமை 29.11.2007 |
| திதி : பஞ்சமி | பி.ப. 12.12 |
| நட்சத்திரம் : | பூசம் முன்னிரவு 07.46 |
| [illegible] | 07.43 - 09.13 |
| [illegible] | 01.42 - [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலி ஆதரவாளர்களுக்கு எதிராக தமிழகத்தில் தீவிர நடவடிக்கை

## தமிழக டி.ஜி.பி. எச்சரிக்கிறார்

சென்னை, நவ.28

இந்தியாவில் தடை செய்யப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாகச் செயற்படுவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தமிழக டி.ஜி.பி.ராஜேந்திரன் எச்சரித்திருக்கிறார்.

சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என டி.ஜி.பி. குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் படுகொலை செய்யப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து பொலிஸாரின் எதிர்ப்பையும் மீறி பேரணி நடத்திய ம.தி.மு.கவின் பொதுச்செயலர் வைகோ, தமிழ்த் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான ஈழத் தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னணியில் -

தமிழ்ச் செல்வன் படுகொலைக்கு கண்டனம் தெரிவித்து ஈழத்தமிழ் ஆதரவு அமைப்புகள் சார்பில் தமிழகத்தில் 'போஸ்டர்'கள் ஒட்டப்பட்ட பின்னணியில் -

'போஸ்டர்' விவகாரத்துக்கு மத்திய அமைச்சர் இளங்கோவன், தமிழக காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவர் கிருஷ்ணசாமி உட்பட சில அரசியல் கட்சித் தலைவர்கள் எதிர்ப்புக்கிளப்பியிருக்கும் பின்னணியில் -

தமிழகப் பொலிஸ் டி.ஜி.பி. ராஜேந்திரன் நேற்றுமுன்தினம் இரவு அவசர அவரசமாக தமிழக நாளேடுகளுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்.

'தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாக ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், உள்ளிருப்புக் கூட்டங்கள், பட்டி மன்றங்கள், இரங்கல் கூட்டங்கள் நடத்துபவர்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள், உருவ பொம்மைகள் எரித்தல், சாலை மறியல் செய்தல் போன்ற போராட்டங்களில் ஈடுபடும் அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் மீது 'சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்' கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், தடைசெய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாக சுவரொட்டிகள் ஒட்டுதல், துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்தல், சுவர் விளம்பரங்கள் செய்தல், கண்காட்சி நடத்துதல் மற்றும் எவ்வித ஆதரவுச் செயற்பாடுகளிலும் ஈடுபடக் கூடாது. மீறி நடப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் அச்சிடும் அச்சக உரிமையாளர்கள் மீதும் சட்டப்படி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், பொது இடங்களில் கட்சித் தலைவர்கள் மற்றும் முக்கிய நபர்களின் உருவ பொம்மைகளை எரிப்பது, அவமானப்படுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்'' - என அந்த அறிக்கையில் டி.ஜி.பி. குறிப்பிட்டுள்ளார். (சி)

## ஓமந்தையில் மோதல் சம்பவம்

கொழும்பு, நவ.28

புலிகளுக்கும் படைகளுக்கும் இடையிலான மோதல் சம்பவமொன்று வவுனியா, ஓமந்தை பகுதியில் நேற்று அதிகாலை இடம் பெற்றிருக்கின்றது.

''ஓமந்தை முன்னரங்க நிலைகள் மீது புலிகள் தாக்குதலைத் தொடுக்க, அதற்கு படைகள் தொடுத்த பதிலடியில் 4 புலிகள் உயிரிழந்தனர். அவர்களின் பதுங்கு குழி ஒன்று நிர்மூலமாக்கப்பட்டது'' - இப்படி பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தகவல் வெளியிட்டிருக்கின்றது.

''நேற்று அதிகாலை 4.25 மணியளவில் நடந்த இந்த மோதல் சம்பவத்தில் படைத் தரப்புக்கு எந்தப் பாதிப்பும் இல்லை '' - என்றும் ஊடக மத்திய நிலையம் மேலும் குறிப்பிட்டிருக்கின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் எவையும் நேற்றுமாலை வரை கிடைக்கவில்லை.(சி)

## முகமாலையில் சிப்பாய் பலி!

கொழும்பு,நவ.28

யாழ்.மாவட்டம் முகமாலைப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோதல் ஒன்றில் படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்றும் மேலும் பல படையினர் காயமடைந்தனர் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

அதிகாலை 4.45 மணியளவில் அப் பகுதியிலுள்ள புலிகளின் முன்னரண்களைத் தாக்குவதற்காக அரச படைகள் முன்னேறி வந்தன என்றும், இதனையடுத்து புலிகள் அணி பதில் தாக்குதல் மேற்கொண்டது என்றும், அதையடுத்து படைத்தரப்பினர் பின்வாங்கிப் பழைய நிலைக்குத் திரும்பினர் என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த மோதல் தொடர்பாக நேற்று இரவு வரை படைத்தரப்புச் செய்திகள் எதுவும் வெளிவரவில்லை. (சி)

## துணுக்காயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகுந்தலாதேவி, நித்தியானந்தன் கௌசிகா, கிரிஜா, நிதர்சனா ஆகியோரே பலியான பாடசாலைச் சிறுவர்கள் ஆவர்.

சந்திரசேகரம் யசிதா, தேவசகாயம் உதயவாணி ஆகியோர் படுகாயமடைந்திருக்கின்றனர். (அ-சி)

## பிரபாவைக் கொல்வது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓங்கியிருக்கின்றது என வலிமை வாய்ந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கொழும்பில் தெரிவித்தார்.

இம்மாத முற்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்டார். அது இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் என்று கூறும் அரசு, தற்செயலாக அதில் தமிழ்ச்செல்வன் சிக்கினார் என்பதை மறுக்கின்றது.

### கடைசிப் பிறந்ததினமாக இருக்கும்

''தமிழ்ச்செல்வனின் கொலை ஒரு பலமான செய்தியை எடுத்துச்சென்றது. அவர்களின் நடமாட்டம் குறித்து நுண்ணியமான புலனாய்வுத் தகவல்கள் எங்களிடம் உள்ளன என்பது அவர்களுக்கு இப்போது தெரியும்.'' - என்று திங்களன்று(நவ. 26இல்) மிகுந்த பாதுகாப்பு மிக்க பாதுகாப்பு அமைச்சுக்குள் இருந்தபடி பேட்டியளித்த ராஜபக்ஷ கூறினார்.

திங்களன்றுதான் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 53ஆவது பிறந்த தினமாகும். திட்டப்படி எல்லாம் நடந்தால் அதுதான் அவரது கடைசிப் பிறந்ததினம் என்றார் ராஜபக்ஷ.

''நாம் அவரை இல்க்கு வைத்துள்ளோம். அவர்களது தலைமையை நாம் விசேடமாகக் குறிவைத்துள்ளோம்.'' - என்றார் அவர்.

''கடந்த சில மாதங்களாக அவர் (பிரபாகரன்) தமது நடமாட்டங்களை மேலும் குறைத்துக் கொண்டுள்ளார். நாம் அவர்களை நெருக்குவாரத்துக்குள் வைத்திருக்க விரும்புகிறோம். புலனாய்வுத் தகவல்களை நாம் திரட்டி வருகின்றோம்.''

### புலிகளைத் திருகவேண்டியதுதான் பாக்கி

''எங்கள் நோக்கம் அவர்களைப் பலவீனப்படுத்துவது. இராணுவ ரீதியாக அவர்களைத் தோற்கடித்து, வன்னியை எமது கட்டுப்பாட்டின் கீழ் நாம் கொண்டு வந்தாக வேண்டும்.'' - என்றார் அவர்.

''அது சாத்தியமானதே. நாம் அவர்களைத் திருகவேண்டியதுதான் பாக்கி. அதன் பின்னர் அமைதித் தீர்வு கிட்டுவது சாத்தியமாகும். '' - என்று குறிப்பிடும் பாதுகாப்புச் செயலாளர், புலிகள் மேலும் ஆயுதங்களைக் கடத்துவதற்கு மட்டுமே யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்துவதால் அவர்களைச் சிதறடிப்பதே வழி என்றார்.

புலிகளின் இலகு ரக விமானத் தாக்குதல்கள், கரும்புலித் தாக்குதல்கள் போன்றவற்றின் முக்கியத்துவத்தை அடியோடு நிராகரிக்கிறார் பாதுகாப்புச் செயலாளர்.

''இறுதியில் அவை வெறும் குறியீடுகள்தாம். அவை மனோ வலிமையைப் பாதிக்கலாம். ஆனால் தந்திரோபாய ரீதியில் அவை எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தா'' - என்கிறார் அவர். (சி)

## சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயம் என்ற விவகாரம் குறித்துத் தங்களுக்கு எதுவுமே தெரியாது எனக் கொழும் பில் உள்ள இந்தியத் தூதரக வட்டாராங்கள் தெரிவித்தன. (சி)

## புலிகளின் குரல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயினும் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையை புலிகளின் குரல் நேரடியாக ஒலிபரப்பியது. அதன் பின்னரும் நேற்றி ரவு 8.30 மணிக்கு செய்தி அறிக்கையை யும் அதனைத் தொடர்ந்து பல நிகழ்ச்சிகளையும் இரவு 10 மணிவரையும் ஒலிபரப்பியது. (அ)


அஸ்ரன் கல்வி நிலையம்
ASTAN
நவாலி வீதி, ஆனைக்கோட்டை
T.P.:0212224031
Mobi: 0774014317

புதிய கல்வியாண்டின் புதிய பிரிவுகளுக்கான வகுப்புகள் ஆரம்பம். 08.12.2007
அனுமதிகளை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தரம் 01 முதல் O/L, A/L வரையான வகுப்புகளுக்கு கல்வி கற்பிக்க ஆர்வமுடையவர்கள் 05.12.2007இற்கு முன்னர் தொடர்புகொள்ளவும். விண்ணப்பிக்க விரும்புபவர்கள் குறைந்தது A/L கற்று தேர்சிசியிடைந்திருக்க வேண்டும்.
இயக்குநர் T.கிருபா

For Your Future !
Mother Board
intel Processor
Hard Disks
DDR, DDRII, Ram
Optical Disc Drive
DVD -RW
Monitors - CRT, LCD
Flash, hp Toner (No 1)
(இலங்கையில் hp முகவரினால் அங்கீகரிக்கப்பட்டது)
Printer Ribbon , Cartridges and Tonner
CD banana A Grade A/L A Grade 20/-
Intel pentium4 3.0 Ghz AsRock / Foxconn Mother board, 512 DDR II, 80Gb HDD, Combo, ATX Case with SMPS 15" CRT Monitor Keyboard, Mouse.
Printer, Scanner
UPS 6500/=
Warranty 1 & 3 Years
All Type Casing 4750/=
சகல விதமான கணனி உதிரிப்பாகங்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
திருமுருகன் கொம்நெற்
259 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 222 7835
(ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு 15.01.1958 உதிர்வு 18.10.2007

கடந்த 18.10.2007 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் கந்தசாமி நித்தியானந்தம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (29.11.2007) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைகின்றோம்.

- குடும்பத்தினர்.
கந்தசாமி கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்

(சி/54500)

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா கார்த்திகேசு



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பையா கார்த்திகேசு(கறுப்பர்) நேற்று (27.11.2007) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் நாகம்மா அவர்களின் அன்புக் கணவரும் தவமணி, நவரத்தினராசா, குணரத்தினராசா, சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருஷ்ணராஜா, சிவகௌரி, புவிவதனி ஆகியோரின் மாமானாரும் காலஞ்சென்றவர்களான தம்பையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - அன்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கந்தையா, சுப்பிரமணியம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும் துஷாந்தன், தரணியா, அரவிந்தன், அர்ச்சனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி மேற்கு,*
*கைதடி.* (68405)

தகவல்:
குடும்பத்தினர்.

### செபமாலை.மாசிலாமணி



இல.175, 2ஆம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை மாசிலாமணி(23.11.2007) வெள்ளிக்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பறுநாந்து - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பேதுறு செபமாலையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற டக்ளஸ் இக்னேஸ்வரன், அஞ்சலஸ் ஞானேஸ்வரன்(அமெரிக்கா), கமிலஸ் யோகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற செபமாலை செல்லக்குட்டி, காலஞ்சென்ற டோமினிக் மற்றும் டோனாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் றாஜினியின் அன்பு மாமியும் அன்றியா, அலன் ஆகியோரின் பேர்த்தியும் திரேசம்மா, காலஞ்சென்றவர்களான பேதுறு செபஸ்ரி, மாணிக்கம், பிரகாசி பறுநாந்து, அருளம்மா, பரிமளம் மற்றும் ஆன்றோஸ், ராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (28.11.2007) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுட்ல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*175, 2ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.* (68407)

தகவல்:
ப.டோனாஸ்
(சகோதரன்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org